REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒகஸ்ட் 3 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 182 | Wednesday 03, August, 2023 | 16 பக்கங்கள் | 50/-




## இந்திய ரூபாவின் அங்கீகாரமானது சட்ட பூர்வமான அங்கீகாரமல்ல

### உள்ளூர் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை ரூபாவிலேயே



இந்திய ரூபா தொடர்பில் சில தவறான கருத்துக்கள் தற்போது பொதுமக்கள் மத்தியில் பரப்பப்படுவது தொடர்பில், இலங்கை மத்திய வங்கி தெளிவுபடுத்தியுள்ளது.

இந்திய ரூபா தொடர்பில் மக்கள் மத்தியில் பரப்பப்படும் தவறான கூற்றுக்களால் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்படக்கூடாதென, இலங்கை மத்திய வங்கி கோரிக்கை விடுக்கின்றது. இதற்கமைய, மத்திய வங்கி தெரிவித்துள்ளதாவது,

பன்னாட்டு வர்த்தகம் மற்றும் எல்லைகடந்த வங்கித்தொழில் கொடுக்கல்வாங்கல்கள் என்பவற்றை வசதிப்படுத்தும் நோக்குடன், இலங்கை மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு

06

## நிவாரணங்கள் வழங்கலில் அரசினால் புதிய முறை அறிமுகம்

### சிலரது தேவைக்காக பயன்படுத்துவதற்கு முற்றுப்புள்ளி



அரசியல்வாதிகள் மற்றும் தனிப்பட்ட நபர்களின் தேவைகளுக்கு இணங்க நிவாரணங்களை வழங்கிய முறைமைக்கு முற்றுப்புள்ளி வைக்க, நடவடிக்கை எடுத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

வறுமை நிலையிலுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவரும் போது பணம் படைத்த தரப்பினரே, இதற்கு எதிராக செயற்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில்

06

### உலக தெங்கு தினத்தை முன்னிட்டு

## வடக்கு மாகாணத்தில் தெங்கு முக்கோண திட்டம்

### ஜனாதிபதியின் பணிப்பில் செப்.02 இல் ஆரம்பம்



உலக தெங்கு தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய செப்டெம்பர் (02) நாட்டின் இரண்டாவது தெங்கு முக்கோணத்தை யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களை மையப்படுத்தி வடக்கில் ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழிற்சாலைகள் மற்றும் தொழிலைகள் அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

06

### அடுத்த மூன்று மாதங்களுக்கு தேவையானதாக கருதப்படும்

# அவசர மருந்து தேவைக்கு மேலதிகமாக 30 பில். ரூபா

### சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மருந்துகள் கொள்வனவு



### சுகாதார சேவைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான வழிமுறையையும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்

### WHO தரநிலை அளவுகோல்களுக்கு அமைய ஆய்வக வசதிகளை நிறுவுவதற்கான சட்டமூலம் தயாரிக்க ஜனாதிபதி ஆலோசனை

மக்களின் நல்வாழ்வை பாதுகாக்கும் வகையில் புதிய மருத்துவ சட்டமூலத்தை ஆறு மாதங்களுக்குள் தயாரித்து சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். அதன்படி, தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைத் தவிர்த்து, சிறந்த சுகாதார சேவையையும், பொது நலனையும் உறுதி செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள மருத்துவக் கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய காலத்திற்கேற்ற மாற்றங்களை ஆராய்ந்து, புதிய மருத்துவச் சட்டமொன்றைக் கொண்டுவருவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர், சட்ட வரைஞர் மற்றும் இலங்கை மருத்துவ சபையின் தலைவர்

06

## நெருக்கடியிலிருந்து நாடு மீள்கையில் அனைவரது ஒத்துழைப்பும் அவசியம்

### ஊடகங்களின் ஒத்துழைப்பும் மிக அவசியமென UNDP செயலமர்வில் அமைச்சர் பந்துல தெரிவிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுரங்கப்பாதை முடிவுறும்போது தென்படும் ஒளியைப் போன்று நாடு நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில், அனைவரது ஒத்துழைப்பும் குறிப்பாக ஊடகங்களின் ஒத்துழைப்பும் அவசியமானதென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

UNDP ஏற்பாடு செய்திருந்த ஊடக வளர்ச்சி தொடர்பான செயலமர்வின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், ஊடக மட்டுப்படுத்தலானது மேற்கொள்ளக்கூடாத ஒன்றாகும். இது ஜனநாயகத்துக்கு

06

03

### ‘அஸ்வெசும’ முதலாவது கொடுப்பனவு இவ்வாரம்

சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவிப்பு

## பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்த புதிய திட்டம்

### வேலைத்திட்டம் ஆரம்பமென்கிறார் அமைச்சர் டிரான் அலஸ்



பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருள் வர்த்தகம் என்பவற்றை கட்டுப்படுத்துவதற்காக, புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில், வினவப்பட்ட கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இவ்வாறு

06

## ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து இனப்பிரச்சினை குறித்து பேச்சு!

### தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் முடிவு



இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரடியாகச் சந்தித்து பேசத் தீர்மானித்துள்ளதாகத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அடுத்து வரும் தினங்களில் இரா. சம்பந்தன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு நடவடிக்கை

06

## ஹரீன், மனுஷ மீதான தடையை ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியது

### செயற்குழுவிலும் உள்ளீர்க்க தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



அமைச்சர்களான மனுஷ நாணயக்கார மற்றும் ஹரீன் பெர்னாண்டோ ஆகியோருக்கு விதிக்கப்பட்டிருந்த கட்சித்

06

## ரிஷாத் எம்பிக்கு எதிரான தீர்ப்பு இடைநிறுத்தம்

### பெப்ரவரி 28 இல் விசாரணை



வில்பத்துக்கு சரணாலயத்துக்கு அருகில் காடுகள் வெட்டப்பட்ட பகுதிகளில் மீண்டும் மரங்களை நடுவது தொடர்பில், முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பை

06

## பட்டதாரிகள் 5,450 பேருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கிணங்க 5,450 பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையில் முன்னெடுக்கப்படவுள்ள சிறந்த அபிவிருத்திகள் தொடர்பில் அதிபர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்விலே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், விஞ்ஞானம், தொழில்நுட்பம்,

06

### மானியமாக கிடைத்த 750 மில். இந்திய ரூபா

## இந்திய அரசின் நிதியுதவியில் மலையகம் மறுசீரமைப்பு

### அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய விஜயத்தின் போது இந்திய அரசாங்கம் இலங்கைக்கு 750 மில்லியன் இந்திய ரூபாவை மானியமாக வழங்குவதாக அறிவித்தது.

மலையக மேம்பாட்டுக்கென இந்தியாவால் அறிவிக்கப்பட்ட இந்நிதி, கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளுக்கு முதன்மையாகப் பயன்படுத்தப்படுமென அமைச்சர் ஜீவன் தொண்டமான்

06

## பொலிஸ் அதிகாரிக்கு கொலை அச்சுறுத்தல்

### தனியார் பஸ் உரிமையாளர் கைது



போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த வெலிக்கடை பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில், தனியார் பஸ் உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நுகேகொடைக்கும், ஹெட்டியாவத்தைக்குமிடையே சேவையில் ஈடுபடும் 176ஆம் இலக்க தனியார் பஸ்ஸொன்றின் உரிமையாளரே, இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்

06

### மூத்த தமிழ் ஊடகவியலாளரான

## விமல் சொக்கநாதன் விபத்தில் காலமானார்



தமிழ் ஊடகப் பரப்பின் மூத்த ஊடகரும் மிகப் பிரபல ஒலிபரப்பாளரும் ஐ.பி.சி வானொலியில் பணி புரிந்தவருமான விமல் சொக்கநாதன், லண்டனில் அகால மரணமடைந்தமை புலம்பெயர் ஊடகத்துறையை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

தனது வீட்டிலிருந்து (01) நடைபயிற்சிக்காக சென்றபோதே, விபத்தில் சிக்கி இவர் உயிரிழந்துள்ளார்.

06

### தெஹிவளையில் அமைந்துள்ள

## விஜயகுமாரதுங்கவின் சிலைக்கு சேதம்

### பொலிஸார் தீவிர விசாரணை



தெஹிவளை பொதுச் சந்தை வளாகத்துக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள பிரபல நடிகர், அரசியல்வாதி அமரர் விஜய குமாரதுங்கவின் சிலைமீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

06

### பிரேசிலைச் சேர்ந்த 127 வயதான நபர்

## உலகின் மிக வயதான மனிதர் காலமானார்



உலகின் மிக வயதான மனிதரெனக் கூறப்படும் பிரேசிலைச் சேர்ந்த ஜோஸ் பாலினோ கோம்ஸ் தனது 127ஆவது வயதில் காலமானார். பிரேசிலைச் சேர்ந்த ஜோஸ் பாலினோ, நாளை (04) தனது 128 ஆவது பிறந்தநாளை கொண்டாட ஏற்பாடு செய்திருந்தார். எனினும் அவர், மினாஸ் ஜெரைஸ் மாநிலத்தில் அமைந்துள்ள

06

## போலி ஆவணங்களில் இத்தாலி செல்ல முயற்சி

### யாழ். சங்கானை தம்பதி விமான நிலையத்தில் கைது



போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இலங்கை இளம் தம்பதியினர், குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகளால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் செவ்வாய்க்கிழமை (01) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், சங்கானைப் பிரதேசத்தில் வசிக்கும் இளம் தம்பதியினரே இவ்வாறு

06

## சீமெந்து லொறியுடன் CTB பஸ் நேருக்கு நேர் மோதி விபத்து

### பெண் ஒருவர் பலி, 10 பேருக்கு காயம்



வரக்காபொல துல்ஹிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில், பெண்ணொருவர் பலியாகியுள்ளார். விபத்தில் சுமார் 10 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

06

## தங்கத்தின் விலையில் நேற்று பாரிய வீழ்ச்சி

### 24 கரட் பவுண் ரூ.1,67,000 ஆக குறைவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தங்கத்தின் விலை குறைவடைந்துள்ளதாகவும் நேற்று முற்பகல் கொழும்பு செட்டியார் தெரு தங்க நகை வர்த்தக நிலையங்களில் 22 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 1,54,500 ரூபாவாக

06

# நகர்வலம்



### கிறிஸ்தவ சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில்

# 'அன்புக்கு எல்லை உண்டா' இன நல்லிணக்க ஒன்றுகூடல்

### கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, சர்வமத தலைவர்கள் பங்கேற்பு



**ஏ.எஸ்.எம்.ஜாவித்**

பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டில் சமுக ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் புத்தசாசன சமய மதவிவகார அமைச்சின் கீழுள்ள கிறிஸ்தவ சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டில் இனம் மதம் காரணமாக 'அன்புக்கு எல்லை உண்டா' எனும் தொணிப் பொருளில் அறநெறி பாடசாலை மாணவர்களுக்கான கல்விக் கண்காட்சியும் கலை கலாசார நிகழ்வுகளையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை (30) நீர்கொழும்பு மரிஸ்ரலா கல்லூரியில் ஏற்பாடு செய்திருந்தது.

கிறிஸ்தவமத கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி சத்துரி பின்து தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் புத்தசாசன சமய மதவிவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரன மற்றும் நான்கு சமய திணைக்களங்களின் பணிப்பாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள், திணைக்களங்களின் அலுவலர்கள், சர்வமத தலைவர்கள் மற்றும் ஞாயிறு அறநெறி பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது நான்கு சமயங்களின் வரலாற்று உண்மைகள், கலாசார சமய நடவடிக்கைகள், சமயங்களின் முக்கிய ஸ்தலங்கள் தொடர்பான விளக்கங்கள், சமயங்களால் பயன்படுத்தப்படும் சமய அடையாளங்களுடன் கூடிய பொருட்கள் காட்சிப்படுத்தல் மற்றும் சமயங்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தியானா தர்மலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம்



தர்மலிங்கம் பரமசிவம் மற்றும் சித்ரா தர்மலிங்கம் தம்பதியின் புதல்வியும் ஸ்ரீமதி சித்ரா தர்மலிங்கத்தின் மாணவியுமான செல்வி தியானா தர்மலிங்கத்தின் பரத நாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு 7 மியூசியஸ் கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கனடாவிலிருந்து வருகை தந்து தாய் மண்ணில் அரங்கேற காத்திருக்கும் இந்த பரத நாட்டிய அரங்கேற்றத்தை காண வருமாறு கலைஞர்கள், ஆசிரியர்கள், கலாரசிகர்கள், நண்பர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

# வானுடன் மோ. சைக்கிள் மோதி விபத்து; கணவன், மனைவி பலி

### 14 வயது சிறுமி காயம்; திஸ்ஸமகாராமையில் சம்பவம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

கதிர்காமம் திஸ்ஸமகாராமை பிரதான வீதியில் ஆறாம் கட்டை
பிரதேசத்தில் பயணித்த வானொன்றுடன் மோட்டார் சைக்கிள் நேருக்குநேர் மோதியதில் அதில் பயணித்த தம்பதிகளான ஆசிரியை, அவரது கணவர் ஆகியோர் உயிரிழந்துள்ளதுடன் அவர்களது 14 வயது குழந்தை பாரிய காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக திஸ்ஸமகாராமை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் ஆனந்த அமரனாத் எனும் 60 வயது கணவரும், விமலாவதீ கமகே எனும் 51 வயது மனைவியுமே உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த ஆசிரியை திஸ்ஸமகாராமை யடால கனிஷ்ட வித்தியாலயத்தில் சேவையாற்றி வருபவர் என தெரிய வந்துள்ளது. வான் சாரதி போதையில் இருந்துள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

### பயமின்றி குழந்தைகளை அழைத்து வரவும்;

# 'லேடி ரிட்ஜ்வே' மருத்துவமனை மீது சிலர் பொய் வதந்தி!

### நம்ப வேண்டாமென நிர்வாகம் பெற்றோரிடம் கோரிக்கை



லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சத்திர சிகிச்சைகள் தொடர்பில் சிலர் பொய்யான தகவல்களைப் பரப்பி வருவதாகவும், குழந்தைகள் நோய்வாய்ப்பட்டிருக்கும் போது அவர்களை தாமதமின்றி வைத்தியசாலைக்கு அழைத்து வருமாறும் அதன் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜி. விஜேசூரிய பெற்றோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் சிறுநீரக சத்திர சிகிச்சையின் பின்னர் இரண்டு வயதுக் குழந்தை உயிரிழந்ததை முன்னிலைப்படுத்தி சிலர் வைத்தியசாலை தொடர்பில் தவறான தகவல்களை பரப்பி வருவதாக சுகாதார அமைச்சில் நேற்று முன்தினம் (31) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

குழந்தையின் சத்திரசிகிச்சை தொடர்பான அனைத்துப் பரிசோதனைகளும் செய்யப்பட்டுள்ளதாகவும், கிருமிகள் உட்சென்றதால் குழந்தை உயிரிழந்துள்ளதாகவும் அவர் இங்கு தெரிவித்தார்.

இருப்பினும், மருத்துவமனையில் தினமும் 50க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன, மேலும் குழந்தைகளுக்கு எம்.ஆர்.ஐ. பரிசோதனைகள், CT பரிசோதனைகள் மற்றும் இரத்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

மேலும் மருத்துவமனையில் மருந்து தட்டுப்பாடு இன்றி சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் குழந்தைகளுக்கு தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தாமல் மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சை அளிக்குமாறு நிபுணர் டாக்டர் ஜி. விஜேசூரிய மேலும் தெரிவித்தார்.

## பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸின் 'சிந்திப்போம்' நூல் வெளியீடு



பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் எழுதிய 'சிந்திப்போம்' பத்திகளின் தொகுப்பு வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு 7 இல் அமைந்துள்ள இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை மிகவும் உன்னத மற்றும் செழுமை மிகு நிலைமையை அடைய வேண்டும் என்ற உயர்ந்த எதிர்பார்ப்போடு முற்போக்குப் பார்வை நோக்குடன் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் சில காலமாக தேசிய பத்திரிகையொன்றுக்கு எழுதிய பத்திகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவருகிறது. முன்னதாக பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்டு அவர் ஐந்து படைப்புகளை இலக்கியத் துறைக்கு சமர்ப்பித்துள்ளர். 'சிந்திப்போம்' நூல் வெளியீட்டு நிகழ்வன்று 50 சதவீதம் விசேட விலைக்கழிவுடன் இந்நூலை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# நாட்டில் முதலீடுகளை ஊக்குவிக்க பல்வேறு வேலைத் திட்டங்கள்

### ஜனாதிபதியின் வழிகாட்டலில் அரசாங்கம் முன்னெடுப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் நாட்டில் முதலீடு செய்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவதற்கு பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கையில் வர்த்தக வசதிகளை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை உருவாக்கும் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (30) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முதலீட்டாளர்களுக்கு உள்ள தடைகளை நீக்கி, நாட்டில் வர்த்தகம் மேற்கொள்வதை எளிதாக்கும் வகையில் சட்டம் கொண்டு வர எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், முதலீடு மற்றும் வியாபாரத்தை ஊக்குவிப்பதில் அதிகாரி



வ ர்க்க ஆட்சி பாரிய தடையாக உள்ளது என சுட்டிக்காட்டிய அவர், நிர்வாக செயற்பாடுகளுக்கு அரச சேவை முகாமைத்துவ கொள்கையே தேவை எனவும் தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே,

வர்த்தக வசதிகள் மேம்படுத்தல் குறிகாட்டியில் இன்று நாம் 99 ஆவது இடத்தில் இருக்கிறோம். இதனுடன் தொடர்புள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கி பணிகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி எமக்கு பூரண சுதந்திரம் வழங்கியுள்ளார். அத்துடன், இது தொடர்பில் ஜனாதிபதி செயலணியொன்று தற்போது செயற்பட்டு வருகின்றது. பாராளுமன்றம் வழங்கிய பொருத்தமான பரிந்துரைகள் உடனடியாகவும், நடுத்தர மற்றும் நீண்ட காலத்திலும் செயல்படுத்தப்படும்.

குறிப்பாக, நாட்டில் வர்த்தகத்தை எளிதாக்கும் வகையில் சட்டம் கொண்டு வர எதிர்பார்க்கப்படுகிறது. முதலீட்டாளர் ஒருவர் நாட்டுக்கு வரும் போது, சம்பந்தப்பட்ட துறையில் முத லீடு செய்வதற்கு ஏற்ற காணி எங்குள்ளது என்பதைத் துல்லியமாக அறியும் தரவுக் கட்டமை ப்பு இன்னும் நம் நாட்டில் இல்லை . ஆனால் இந்தியாவில் காணி தொடர்பான தரவுத் தகவல் வங்கி உள்ளது. நாமும் அத்தகைய திட்டத்திற்கு செல்ல வேண்டும் என்றார்.



சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டின் கௌன்சல் ஜெனரல் TAGA மசயுகி இந்தியாவிற்கான இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி டி. வெங்கடேஷ்வரனை மரியாதையின் நிமித்தம் (31) சந்தித்து உரையாடினார்.

# அறபா '91 நலன்புரிச் சங்க' ஏற்பாட்டில் வெலிகமவில் கல்விக் கருத்தரங்கு

வெலிகம அறபா தேசிய பாடசாலை பழைய மாணவர் குழுக்களின் ஒன்றான "அறபா 91 நலன்புரிச் சங்கம்" ஏற்பாடு செய்துள்ள கல்விக்கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை (4) காலை 8.00 மணிக்கு பாடசாலை வபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் எம்.ரீ.எம். முதஹ்ஹரின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறபா பழைய மாணவர்களான வைத்தியர் எம்.எப்.எம். இம்தியாஸ் மற்றும் வைத்தியர் எம்.இஸட். எம்.திஹான் ஆகியோர் வளவாளர்களாக பங்கேற்று விரிவுரையாற்றவுள்ளனர்.

அறபா தேசிய பாடசாலை தரம் 10,11,12 ஆம் தரம் மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த கருத்தரங்கில் அறபா 91 பழைய மாணவர் சங்கத்தின் இணைச் செயலாளர் ஊடகவியலாளர் எம்.எஸ்.பாஹிம் வரவேற்புரை நிகழ்த்த பாடசாலை அதிபரின் உரையும் இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து கம்பியூட்டர் விசன் சிண்ட்ரோம் என்ற தலைப்பில் வைத்தியர் எம். எப்.எம். இம்தியாஸும் நினைவாற்றலுக்கான கருவிகளும் நுட்பங்களும் என்ற தலைப்பில் வைத்தியர் எம்.இஸட். எம். திஹானும் உரையாற்றுவர். இதன் போது கருத்தரங்குடன் தொடர்புடையதாக மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நன்றியுரையை அமைப்பின் தலைவர் எம்.இஸட்.எம். அர்பத் நிகழ்த்துவார்.

மேற்படி சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடலுடன் இணைந்ததாக இந்தக் கருத்தரங்கு முதன்முறையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.




## ஆசிரியையை அச்சுறுத்தி தங்கச் சங்கிலி அபகரிப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நொச்சியாகம பஹல ஹல்மில்லாவ வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த பாடசாலை ஆசிரியையை பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் ஒருவர் கைத்துப்பாக்கி போன்ற ஆயுதம் ஒன்றை காண்பித்து அச்சுறுத்தி கழுத்தில் அணிந்திருந்த 185,500 ரூபா பெறுமதிமிக்க தங்க மாலையை அபகரித்து தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் நொச்சியாகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.சம்பவம்தொடர்பில் ஆசிரியை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டிற்கமைய விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### வினா விடைப்போட்டி; பலாகல கோட்ட மட்டத்திலிருந்து

# 06 மாணவர்கள் தெரிவு

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

பலாகல கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கணித திறன் விருத்தி வினா விடைப் போட்டியில் தமிழ்மொழிப் பாடசாலைகளிலிருந்து ஆறு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தரம் 06 பிரிவில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி எப். எஸ்.சுக்ரியா 72 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் தரம் 07 பிரிவில் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி எம். எப்.எப். ஹனா 73 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் தரம் 08 பிரிவில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவி ஆர்.எப். ஹப்சா 85 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். தரம் 09 பிரிவில் நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் எம்.ஆர்.எம்.அர்ஹம் 50 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் 35 புள்ளிகளைப் பெற்ற நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் எம்.என்.ஹசுன் மூன்றாம் இடத்தையும், தரம் 11 பிரிவில் நேகம முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் எம்.எஸ்.துபைல் அகமட் 50 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

## புதிய அலை கலை வட்ட ஏற்பாட்டில் விழிப்புணர்வு செயலமர்வு

புதிய அலை கலை வட்டத்தின் கலை, இலக்கிய பிரிவு ஏற்பாடு செய்த 'சமகாலத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் நேர்மறையான சிந்தனைகள் மற்றும் இலக்கு வைக்கப்படுதல்" தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்று கடந்த சனியன்று (29) கொழும்பு 13, எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையில் நடைபெற்றது. மேற்படி பாடசாலையின் அதிபர் ஸ்ரீ வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதாமேத்தா, தலைவர் சண்மு ஆகியோர் கலந்து கொண்டனர்.



நிகழ்வின் வளவாளராக தனா பங்கேற்றிருந்தார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை புதிய அலை கலை வட்ட கலை, இலக்கியப் பிரிவின் தலைவர் சனாதனன் மேற்கொண்டிருந்தார்.

# பெருந்தோட்டப்பயிர் ஏற்றுமதிகளால் அந்நியச் செலாவணி வருவாய் அதிகரிப்பு

## இவ்வருடம் 290 மில். கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்படும்

ஏற்றுமதியை ஊக்குவிக்க இவ் வருடத்தில் 290 மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாக அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

இந்த ஆண்டில், இறப்பர் சார்ந்த ஏற்றுமதி மூலம் 900 மில்லியன் டொலர்களும் தேங்காய் சார்ந்த ஏற்றுமதி மூலம் 700 மில்லியன் டொலர்களும் வருமானமாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் கறுவா பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கும் கோப்பி பயிர்ச் செய்கையை மீள விரிவுபடுத்துவதற்கும் அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.



அங்கு மேலும் கருத்து தெரிவித்த பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன,

கடந்த வருடத்தில் உரத் தட்டுப்பாடு காரணமாக பெருந்தோட்டத்துறை சரிவை சந்தித்திருந்தது. உரத் தட்டுப்பாட்டைப் போன்றே சீரற்ற காலநிலையும் பெருந்தோட்ட கைத்தொழிலுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. அதனால் 50 கிலோ யூரியாவின் விலை முப்பதாயிரம் ரூபாவாக அதிகரித்திருந்தது. இந்நிலையில், தற்போது அதன் விலையை 9,000 வரையில் மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந் நிலைமையின் கீழ், வருட இறுதியில் முன்னூறு மில்லியன் கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியும் என எதிர்பார்க்கப் படுகிறது. மேலும் ஒன்லைன் முறையில் உலக சந்தையில் தேயிலை விற்பனை செய்யும் முறைமை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஈரானிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 500 மில்லியன் டொலர் பெறுமதியான எரிபொருளுக்குப் பதிலீடாக, தேயிலை ஏற்றுமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனால் எமக்கு கிடைக்காது போன ஈரான் தேயிலை சந்தை வாய்ப்பை மீண்டும் தொடர்ச்சியாக பெற்றுக்கொள்வதே எமது எதிர்பார்ப்பாகும். இலங்கையின் தேயிலை கொள்வனவாளர்களான பாகிஸ்தான், ரஸ்யா, உக்ரேன், ஈரான், ஈராக் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் பிரச்சினையால், அவர்களின் தேயிலை கொள்முதல் திறன் குறைவடைந்துள்ளது. இலங்கைத் தேயிலைக்கான விலை உலக சந்தையில் நிலையாக காணப்பட்டாலும், தேயிலை கொள்வனவு செய்யும் நாடுகளின் கொள்முதல் திறன் குறைவடைந்து வருகின்றமை சிக்கலாக உள்ளது.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்கும் வகையில் 10 பேர்ச்சஸ் காணியை அவர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. இதற்கமைய எதிர்வரும் காலங்களில் அவர்களுக்கான காணி உரிமை பெற்றுக்கொடுக்கப்படும்.

அதன் பின்னர் அவர்களுக்கு வீட்டுக் கடன்களை பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது. கடந்த வருடத்தில் இறப்பர் எற்றுமதியிலும் ஒரு பில்லியனை இலாபமாக ஈட்ட முடிந்துள்ளது.

கொரோனா தொற்று பரவிய காலத்தில் கை உறைகள் உற்பத்திக்காக இறப்பர் கொள்வனவு செய்யப்பட்டதால், அதிகளவான ஏற்றுமதி வருமானத்தை பெற்றுக்கொள்ள முடிந்தது. எவ்வாறாயினும் தற்போதைய நெருக்கடிகள் காரணமாக இறப்பருக்கான கேள்வி குறைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# மகாவலி காணிகளில் வசிக்கும் 15,000 பேருக்கு காணி உறுதிகள்

மகாவலி வலயத்தில் காணி உறுதிப்பத்திரம் இல்லாத 20,000 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைவாக மேலும் 15,000 காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் பணி இம்மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், ரொஷான் ரணசிங்க,

கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக கால்வாய்களை சுத்தம் செய்யக் கூட நிதி ஒதுக்க முடியாத நிலை காணப்பட்டதாகவும், உலக வங்கியுடன் கலந்துரையாடி, நிதி அமைச்சின் ஆதரவுடன் இரண்டு திட்டங்களுக்கு 10,000 மில்லியன் ரூபா ஒதுக்க முடிந்ததாகக்

06

## அவுஸ்திரேலியாவில் அகதிகளாகவுள்ள

# அனைவருக்கும் வதிவிடம் வழங்க கோரி இலங்கையர் நடைபயணம்

அவுஸ்திரேலியாவில் அகதிகளாகத் தங்கியுள்ள அனைவருக்கும் நிரந்தர வதிவிடத்தை வழங்குமாறு வலியுறுத்தி, இலங்கையர் ஒருவர் தனியான நடை பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

நீல் பாரா என்ற இலங்கையரே இந்த நடைபயணத்தை ஆரம்பித்துள்ளதாக அவுஸ்திரேலிய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்காக அவர் சுமார் 1,000 கிலோமீற்றர் நடைப்பயணத்தில் ஈடுபட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அவர் பல்லாரத்திலிருந்து சிட்னியிலுள்ள பிரதமர் அலுவலகம் வரை நடைபயணம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார். இவர் 08 வருடங்களாக விசா ஏதுமின்றி அவுஸ்திரேலியாவில் தங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாளொன்றுக்கு சுமார்

06

# 'அஸ்வெசும' முதலாவது கொடுப்பனவு இவ்வாரம்

## சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவிப்பு

அஸ்வெசும பயனாளர்களுக்கான முதலாவது தவணை கொடுப்பனவு இவ்வாரத்தில் வழங்கப்படவுள்ளதாக, சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளர்களுக்கான வங்கி கணக்குகளைத் திறக்கும் செயற்பாடு 95 வீதம் நிறைவடைந்துள்ளதாகவும் சபை குறிப்பிட்டுள்ளது.

அஸ்வெசும பயனாளர்களுக்கு அவர்களின் பிரிவுக்கேற்ப மாதாந்தம் 15,000, 8,500, 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இதனிடையே, அஸ்வெசும திட்டம் தொடர்பாக கிடைத்துள்ள மேன்முறையீடுகள், ஆட்சேபணைகளை பரிசீலித்த பின்னர், மற்றுமொரு பயனாளர்கள் குழு இந்த திட்டத்தில் இணைத்துக் கொள்ளப் படுமென சமூக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அஸ்வெசும நிவாரணத் திட்டத்தின் கீழ் 20 இலட்சம் பயனாளர்களின் வங்கி கணக்குகளில் கொடுப்பனவுகள் வைப்பிலிடப்படவுள்ளன.

# எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் SLPP பாரிய வெற்றியை பெறும்

## சரியான நேரத்தில் "ஏஸ்" துரும்பை வெளியிடுவோம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஜனாதிபதி தேர்தலுக்காக சரியான சந்தர்ப்பத்தில் பொதுஜன பெரமுன 'ஏஸ்' துரும்பை வெளியில் விடும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் தேர்தல்களுக்கான வருடம் என்பதைக் குறிப்பிட்ட அமைச்சர், ஜனாதிபதி வேட்பாளர் மறைத்து வைக்கப்பட்டிருந்தாலும் நாட்டு மக்களின் பெரும்பான்மை வாக்குகள் பொதுஜன பெரமுனவுக்கே உள்ளது என்றும் உறுதிபடத் தெரிவித்துள்ளார். கம்பஹா பகுதியில் அரசியல் செயற்பாட்டாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர், இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க, சிவில் செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள், ஜனாதிபதி தேர்தல்களில் வேட்பாளர்களாக வரிசையில் வருவார்கள். ஜனாதிபதித் தேர்தல் பொதுத்தேர்தல், மாகாண சபைத் தேர்தல், மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் என எந்தத் தேர்தலை நடத்தினாலும் பாரிய வித்தியாசத்தால் வெல்லப்போவது பொதுஜன பெரமுனவே.

போராட்டக்காரர்கள் மற்றும் கலகக் காரர்கள் ஒன்றிணைந்து அழிவுக்கு வித்திட்ட நாடு, தற்போது இயல்பு நிலைக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

நாட்டுக்கான எதிர்காலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமங்க உறுப்படுத்தியுள்ளார். அந்த வகையில் கடந்த 10 நாட்களில் உலகின் தலைசிறந்த நாடுகளின் தலைவர்கள் நான்கு பேர், ஜனாதிபதியை சந்தித்துள்ளமையானது அரசாங்கம் சர்வதேசத்தின் நம்பிக்கையை உச்சளவில் வெற்றி கொண்டுள்ளதையே காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆணின் சடலம் மீட்பு

கடுவெல, வெவபார பற்றைக் காட்டுக்குள் அடையாளம் தெரியாத நபரொருவரின் சடலமொன்று (02) கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கடுவெல பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தின் அருகிலிருந்து இரண்டு கையடக்க தொலைபேசிகள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இந்நபர் 30 வயதிற்கும் 40 வயதுக்குமிடைப்பட்டவரென சந்தேகிக்கப் படுவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சடலத்தில் கடுமையாக தாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். சடலம் தலைக்குப்புற கிடப்பதாகவும் இவர் எப்பிரதேசத்தை சேர்ந்தவரென இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் வேறொரு பிரதேசத்தில் தாக்கப்பட்டு இந்த இடத்துக்கு கொண்டு வந்து சடலம்

06



இலங்கை வங்கியின் 84 ஆவது வருட நிறைவையிட்டு செனாரோ மோட்டார் நிறுவனத்துக்கு பாராட்டு விருதும் வழங்கப்பட்டது. இலங்கை வங்கியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா ஆர். ரொஷானா இவ்விருதை வடுகேவுக்கு வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம். இந்நிகழ்வில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்க 25 பில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளதாகவும் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சி. பெரேரா அறிவித்தார். (படம் – விமல் கருணாதிலக்க)

# சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம் இன்று நடைபெறாது

## தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சுகாதாரத்துறை தொழிற்சங்கங்கள் இன்றைய (04) தினம் மேற்கொள்ளவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சுகாதார சேவை சம்பந்தமான சிக்கல்கள் ஊடகங்களில் தெரிவிக்கப்படுவதை தடை செய்யும் வகையில், சுகாதார அமைச்சின் செயலாளரினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு எதிராகவே சுகாதார தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவிருந்தன. இவ்விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர் நேற்றைய தினம் மேற்படி தொழிற் சங்கங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இந்நிலையில், தற்காலிகமாக தமது தீர்மானத்தை இடைநிறுத்தியுள்ளதாக சுகாதார தொழிற்சங்கங்களின்

06

# வாடகை கட்டடங்களில் இயங்கும் பொலிஸ் நிலையங்களால் அதிக செலவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

## 121 பொலிஸ் நிலையங்களுக்கு வருடாந்தம் 11 கோடி ரூபா

வாடகைக் கட்டடங்களின் 121 பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருவதாகவும் அவற்றுக்கான வாடகையாக வருடாந்தம் 11 கோடி ரூபாவை அரசாங்கம் செலவிட்டு வருவதாகவும், பொலிஸ் தலைமையகத்தின் முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 607 பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 121 பொலிஸ் நிலையங்கள் வாடகைக் கட்டடங்களிலேயே செயற்பட்டு வருவதாக மேற்படி பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதற்கிணங்க மேல் மாகாணத்தில் தனியார் கட்டடங்களில் இயங்கிவரும் பொலிஸ் நிலையங்களுக்காக மாதாந்தம் 50 இலட்சம் ரூபாவும் வடமாகாணத்தில் இவ்வாறு இயங்கும் பொலிஸ் நிலையங்களுக்காக 2,94,000 ரூபாவும், கிழக்கு மாகாணத்தில் 2,33,000 ரூபாவும் வடமேல் மாகாணத்தில் 05 இலட்சம் ரூபாவும், சப்ரகமுவ மாகாணத்திற்காக 08 இலட்சம் ரூபாவும், மத்திய மாகாணத்திற்காக 09 இலட்சம் ரூபாவும், ஊவா மாகாணத்திற்காக 5 இலட்சம் ரூபாவும் மற்றும் தென் மாகாணத்தில் இயங்கும் பொலிஸ் நிலையங்களுக்காக 05 இலட்சம் ரூபாவும் மாதாந்தம் வாடகை வழங்கப்படுவதாகவும் மேற்படி தரவுகள் தெரிவிக்கின்றன.

# ஒக்டோபர் வரை மழைவீழ்ச்சி இல்லை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைகிறது

இவ்வருடம் ஒக்டோபர் மாதம் வரை போதியளவு மழைவீழ்ச்சி பதிவாகாதென வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பருவப் பெயர்ச்சியின் போதும் போதியளவு மழை பெய்யவில்லையென, திணைக்களத்தின் பணிப்பாளர் ஷிரோமனி ஜயவர்த்தன கூறினார்.

இதனிடையே, நாட்டில் தற்போது நிலவும் வரட்சி காரணமாக நீரேந்து பகுதிகளின் நீர்மட்டம் சடுதியாக குறைவடைந்து வருகின்றது. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 33.3 வீதம் வரை குறைவடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் சுதர்ஷனி விதானபதிரண தெரிவித்துள்ளார்.

மகாவலி ஆற்றின் கொள்ளளவு 34 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக மகாவலி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால தெரிவித்துள்ளார்.

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
| --- | --- | --- |
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
| --- | --- | --- | --- |
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 18ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 15

### குறள் தரும் சிந்தனை



பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு

*உயர்ந்த நிலை வரும்போது அடக்க உணர்வும், அந்த நிலை மாறிவிட்ட சூழலில் யாருக்கும் அடிமையாக அடங்கி நடக்காத மான உணர்வும் வேண்டும்.*

# முன்னேற்றப் பாதையில் இலங்கைப் பொருளாதாரம்

சுதந்திர இலங்கையின் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் நாடு முகம்கொடுத்தது. இந்நெருக்கடியினால் மக்கள் பல் வேறுவிதமான அசௌகரியங்களையும் பாதிப்புகளையும் எதிர்கொண்டனர். அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது. அவற்றின் விலைகளும் பெரிதும் அதிகரித்தன. மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. எரிபொருள் மற்றும் எரிவாயுக்காக நாட்கணக்கில் காத்திருக்கும் நிலைமை உருவாகியது.

நாட்டு மக்கள் இந்நெருக்கடிகளில் இருந்து மீட்சியும் நிவாரணமும் கோரினர். இந்த நிலையில் அரசியலிலும் கொதிநிலை ஏற்பட்டது. அதனால் அன்றைய பிரதமரும் அவர் தலைமையிலான அரசாங்கமும் பதவி விலகும் நிலைக்குள்ளானது. அதனைத் தொடர்ந்த சொற்ப காலத்தில் ஜனாதிபதியும் நாட்டை விட்டு வெளியேறிய நிலையில் பதவி விலகினார்.

பொருளாதார நெருக்கடியுடன் உருவான அரசியல் கொதிநிலையில் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கமும் பதவி விலகியதோடு நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத நிலை ஏற்பட்டது. இந்த இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டையும் மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதை இலக்காகக் கொண்டு வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். கடந்த காலங்களில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகரமாகக் கையாண்டு பெற்றுள்ள பரந்த அனுபவத்தின் அடிப்படையில் அவர் இந்நெருக்கடியையும் கையாண்டார்.

அதன் பயனாக பொருளாதார நெருக்கடிக் காலப் பகுதியில் நாடும் மக்களும் எதிர்கொண்ட அசௌகரியங்களும் பாதிப்புகளும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. குறிப்பாக எரிபொருள், எரிவாயுவுக்காக நாட்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கும் நிலை முதலில் நீங்கியது. அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடி தோற்றுவித்திருந்த ஏனைய அசௌகரியங்களும் நாட்டையும் மக்களையும் விட்டு கட்டம் கட்டமாக அகன்றன.

இந்த நிலையில் பொருளதாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்களின் பிரபலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் பின்னிற்கவில்லை.

இவ்வேலைத்திட்டங்களின் பிரதிபலனாக பொருளாதார மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ள நாடு, நாளுக்குநாள் அடைந்து கொள்ளும் பொருளாதார பிரதிபலன்களும் நம்பிக்கை தரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. குறிப்பாக பொருளாதார நெருக்கடிக் காலத்தில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வந்தது. ஆனால் கடந்த சில வாரங்களாக ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் அதிகரித்து வருகின்றது.

கடந்த சில மாதங்களாகத் தொடராக வீழ்ச்சியடைந்த பணவீக்கம், தற்போது ஒற்றை இலக்கத்திற்கு குறைவடைந்துள்ளது. கடந்த ஜுன் மாதம் 12.0 வீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் இம்மாதம் 6.3 வீதத்திற்கு வீழ்ச்சி அடைந்திருக்கின்றது.

இதேவேளை, உல்லாசப் பயணிகளின் வருகையும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இவ்வருடம் 205 சதவீத அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளது. அந்த வகையில் கடந்த ஏழு மாத காலப்பகுதியில் 7 இலட்சத்து 63 ஆயிரம் உல்லாசப் பயணிகள் இந்நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இதன் மூலம் 800 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருமானமாக நாடு பெற்றுள்ளது.

இவ்வாறான சூழலில் இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில், 'இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் இந்நாட்டின் ஏற்றுமதி வருமானமாக 5.9 பில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெற்றுள்ளதோடு கடந்த மே மற்றும் ஜுன் மாதங்களில் அது ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் வீதம் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

இவை இவ்வாறிருக்க. இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியிலும் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையரால் 2823 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு வருமானமாகக் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் மத்திய வங்கி சுட்டிக் காட்டியுள்ளது.

இவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எடுத்து நோக்கும்போது பொருளாதார நெருக்கடி நிலவிய வருடத்தை விடவும் இவ்வருடம் பல மடங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது தெளிவாகிறது. இவை ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மேம்பாட்டுக்கான வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களே அன்றி வேறில்லை. நாடு பொருளாதார முன்னேற்றப்பாதையில் நம்பிக்கையுடன் பயணித்துக் கொண்டிருப்பதை இந்த மேம்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆகவே ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு அளிக்கப்படும் பாரிய பங்களிப்பாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# விமல் சொக்கநாதனின் கம்பீரக்குரல் ஓய்ந்தது!

## இலங்கை வானொலி ஊடாக தமிழ் பேசும் மக்களை வசீகரித்த மாபெரும் கலைஞனின் மறைவினால் அபிமானிகள் பெருந்துயர்!



உலகப் புகழ்பெற்ற லண்டன் பி.பி.சி வானொலியின் ஒலிபரப்பாளரும், தமிழ்ப்பத்திரிகைகளில் தொடர்ச்சியாக கட்டுரைகளை எழுதிவந்தவரும், சட்டத்தரணியுமான விமல் சொக்கநாதன் லண்டன் மாநகரில் அகால மரணத்தைத் தழுவினார் என்ற செய்தி ஏராளமான மக்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

இலங்கையில் எண்பதுகளில் போர் உக்கிரமடைந்த காலத்தில் பி.பி.சி தமிழோசை பிரபல்யம் மிக்கதாக விளங்கியது. போரின் நெருக்கடிகளிலும், மின்சாரமின்மை, மின்கலங்களுக்கு (பற்றரி) தடை என்பனவற்றுக்கு மத்தியிலும் சைக்கிள் டைனமோக்கள் மூலம் வானொலியை இயக்கி பி.பி.சி வானொலியை தமிழ் மக்கள் கேட்டுவந்தனர்.

தமிழோசையின் அப்போதைய பொறுப்பாளர் 'சங்கர் அண்ணா' என அன்பாக அழைக்கப்படும் சங்கரமூர்த்தி, 'ஆனந்தி அக்கா' என அன்பாக அழைக்கப்படும் மூத்த ஒலிபரப்பாளர் ஆனந்தி சூரியப்பிரகாசம் மற்றும் விமல் சொக்கநாதன் ஆகியோர் அக்காலத்தில் மக்களின் பேரபிமானம் பெற்ற ஒலிபரப்பாளர்களாக இருந்தார்கள். இவர்களது குரலைக் கேட்க இரவு 9 மணிக்கு வானொலியை சிற்றலை வரிசைக்கு திருப்புவது இலங்கைத் தமிழர்களது வழக்கமாகவிருந்தது.

1941ஆம் ஆண்டு மே 3 ஆம் திகதி பி.பி.சி தமிழோசை ஆரம்பிக்கப்பட்டது. தொடக்கத்தில் வாரத்தில் இரண்டு நாட்கள் பதினைந்து நிமிடம் ஒலிபரப்பாகிவந்த தமிழோசை, பின்னர் வாரத்தில் ஐந்து நாட்கள் நாளொன்றுக்கு அரைமணி நேரம் ஒலிபரப்பானது. இந்தியா, இலங்கை மற்றும் கனடா போன்ற புலம்பெயர்நாடுகளில் தமிழ் மக்கள் மத்தியில் இவ் வானொலி பிரபலமாக இருந்தது.




கலைக்குடும்பமொன்றின் ஊடாக இளம் வயதிலேயே கலைத்துறைக்கு வந்தவர் விமல் சொக்கநாதன். சிறுவர் மலர் நாடகங்களில் ஆரம்பித்து, மேடை நாடகங்களில் நிறைய நடித்தவர். சிறந்த வானொலிக் கலைஞரான அவர், இலங்கை வானொலியில் நீண்ட காலம் அறிவிப்பாளராகப் பணியாற்றியவர்.

இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த பின்னர் பி.பி.சி தமிழோசையில் அறிவிப்பாளராக இருக்கும் இவரது குரல் பன்னாட்டு வானொலிகளிலும் ஒலித்தது. அறிவிப்பாளரும், லண்டனில் 'இசைக்குயில்' போட்டி நிகழ்ச்சி அமைப்பாளருமான யோகா தில்லைநாதன் இவரது உடன்பிறந்த சகோதரி ஆவார்.

இலங்கை வானொலியில் விமல் சொக்கநாதன் படைத்த இசையும் கதையும், வாலிப வட்டம் போன்ற நிகழ்ச்சிகள் புகழ் பெற்றவை. நகைச்சுவை கலந்து இவர் வழங்கிய 'களம் பல காண்போம்' என்ற உலக அரசியல் ஆய்வு நிகழ்ச்சி பல அரசியல் தலைவர்களையே கவர்ந்தது. வானொலி ஒலிபரப்புக் கலை பற்றி 'வானொலிக் கலை' என்ற நூலையும் எழுதியுள்ளார். அத்துடன் விமல் சொக்கநாதன் வரணியூரான் இயக்கிய 'பாசச்சுமை' எனும் மேடை நாடகத்திலும் நடித்துள்ளார். அத்துடன் 'நான் உங்கள் தோழன்' என்ற 1978 ஆம் ஆண்டு வெளிவந்த ஈழத்து தமிழ்த் திரைப்படத்திலும் விமல் சொக்கநாதன் நடித்துள்ளார்.

இதுவரை விமல் சொக்கநாதன் மூன்று நூல்களை எழுதியுள்ளார். வானொலி ஒலிபரப்புக் கலை பற்றி 'வானொலிக் கலை' என்ற நூலை சென்னையில் காந்தளகம் பதிப்பகம், மே 2007 இல் வெளியிட்டது.

இதன் பின்னர் மிக அண்மைக் காலத்தில் 'லண்டனில் இருந்து விமல்' தொடர்கட்டுரைகளின் தொகுப்பு நூலும், 'விமலின் பக்கங்கள்' என்ற கட்டுரைகளின் தொகுப்பு நூலையும் விமல் படைத்துள்ளார்.

இவ்விரு நூல்களும் லண்டன், பாரிஸ், சென்னை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் வெளியிடப்பட்டு நண்பர்களாலும் வாசகர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டன. அறிவிப்பின் சிகரமாக, லண்டனில் இருந்து தமிழ் முழங்கிய மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் தனது 75 வயதில் நேற்றுமுன்தினம் லண்டனில் விபத்தொன்றில் அகால மரணமானார். தமிழ் ஒலி அலை ஓய்ந்து, வண்ணக் குரல் இனி முழங்காதோ என மனம் ஏங்குகிறது.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

# காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள் சம்பவம்; 33ஆம் வருட நினைவுதினம் இன்று அனுஷ்டிப்பு

காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 33 வருடங்கள் நிறைவு பெறுகின்றது. 1990 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி அப்படுகொலைகள் இடம்பெற்றன.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆப்பள்ளிவாசல், அதே பகுதியிலுள்ள மஸ்ஜிதுல் ஹுஸைனிய்யா பள்ளிவாசல் ஆகிய இரண்டிலும் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 103 முஸ்லிம்கள் புலிகளால் அன்றைய தினம் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்கள் படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 33 வருடங்கள் பூர்த்தியாகின்றன.

03.08.1990 அன்று இரவு இவ்விரண்டு பள்ளிவாசல்களிலும் புனித இஷாத் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, புலிகள் குண்டுத் தாக்குதல்கள் நடத்தி துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டதில் 103 முஸ்லிம்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

அன்று வெள்ளிக்கிழமை இரவு புனித இஷாத் தொழுகைக்கான அதான் சொல்லப்பட்டதும் சிறியவர், பெரியவர் என அனைவரும் பள்ளியினுள் சென்று வுழூ செய்து கொண்டு தொழுகைக்காக இமாமின் பின்னால் வரிசையாக நின்று கொண்டிருந்த போது புலிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து குண்டுத்தாக்குதலையும் நடத்தினர்.

இதன்போது பலரின் உயிர் அவ்விடத்திலேயே பிரிந்தது. புலிகள் பள்ளிவாசலினுள் புகுந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றார்கள் என்பதை அங்கு தொழுது கொண்டிருந்த பலரும் பின்னர்தான் தெரிந்து கொண்டார்கள். பலர் படுகாயங்களுடன் குற்றுயிராய்க் காணப்பட்டு பின்னர் மரணித்தனர்.

தொழுகைக்காக வந்த சிலரை உள்ளே அவசரமாக செல்லுங்கள் என பள்ளிக்குள் அனுப்பி விட்டு அவர்கள் மீது புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பலர் தெரிவிக்கின்றனர்.

காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை என்பது இலங்கைவாழ் முஸ்லிம்களின் வரலாற்றில் என்றும் மறக்க முடியாத ஒன்றாகும். இந்த இரண்டு பள்ளிவாசல்களிலும் இன்றும் இதன் அடையாளங்கள் அழிக்கப்படாமல் இருக்கின்றன. ஆண்டு தோறும் ஒகஸ்ட் 3 ஆம் திகதி ஷுஹதாக்கள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இன்றைய தினம் படுகொலை இடம்பெற்ற இரண்டு பள்ளிவாயல்களிலும் குர்ஆன் ஓதுதல், விஷேட பிரார்த்தனை உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இம்முறை பேரணியொன்று இடம்பெற்று பிரகடனமும் வெளியிட உள்ளனர்.

2004 ஆம் ஆண்டு நடைபெற்ற ஷுஹதாக்கள் தினத்தின் போது காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை மற்றும் ஏறாவூர் படுகொலைச் சம்பவம் உட்பட முஸ்லிம்கள் மீதான படுகொலைகளின் போது கொல்லப்பட்டவர்களின் நினைவாக தேசிய ஷுஹதாக்கள் தினத்தை ஷுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம் பிரகடனம் செய்திருந்தது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# நானுஓயாவில் உயிராபத்தை ஏற்படுத்தும் மின்கம்பங்கள்!



நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கார்லிபெக் தோட்டத்தில் தோட்டக் குடியிருப்புகளுக்கு மின்சாரம் விநியோகிப்பதற்காக இணைக்கப்பட்டுள்ள மின்கம்பிகள் மிகவும் தாழ்வான உயரத்தில் உள்ளதால் மக்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். மரத்தினாலான மின்கம்பங்கள் பழுதடைந்து தாழ்ந்துள்ளதனால் அவ்விடங்களில் உயிராபத்துடன் நடமாட வேண்டியுள்ளதாக மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கார்பெக் தோட்டத்தில் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன. அப்பகுதிக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக மரத்தினாலான மின்கம்பங்களே கடந்த பல வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டுள்ளன.

குறித்த மின்கம்பங்கள் தற்போது பழுதடைந்து மின்கம்பங்கள் சாய்ந்துள்ளதனால், அதில் இணைக்கப்பட்டுள்ள மின்கம்பிகள் மிகவும் தாழ்வான நிலையில் பல வருடங்களான காணப்படுகின்றன.

தேயிலைக் கொழுந்து பறிக்கும் தொழிலாளர்கள் தங்களது கைகளை தவறுதலாக உயர்த்தினால் மின்கம்பி கையில் பட்டு மின்தாக்கத்துக்கு உள்ளாகும் அபாயம் உள்ளது. எப்போது மரணபயத்துடனேயே அப்பகுதியில் நடமாட வேண்டியுள்ளதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து மின்சாரசபையினருக்கும் ஏனைய அதிகாரிகள் பலருக்கும் தெரிவித்த போதிலும், ஒரு சில மின்கம்பங்கள் மாத்திரமே மாற்றப்பட்டுள்ளதாகவும் ஏனைய 20 இற்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் இதுவரை மாற்றப்படவில்லை என்றும் இதனால் உயிராபத்துக்கள் ஏற்படலாம் எனவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது குறித்து உரிய கவனமெடுத்து தோட்டத் தொழிலாளர்களின் உயிராபத்தைப் போக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

**கே.சுந்தரலிங்கம்...**

# முன்மாதிரியான பாடசாலையாக திகழும் பொத்துவில் மினாறுல் உலூம் வித்தியாலயம்

பொத்துவில் மினாறுல் உலூம் வித்தியாலயமானது இப்பிரதேசத்தின் மத்தியில் அமைந்துள்ள ஆரம்பநெறி ஆண்கள் பாடசாலையாகும். இப்பாடசாலை தற்போது கற்றலுக்கு பொருத்தமானதும், பாதுகாப்பானதுமான சூழலைக் கொண்டு அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஜனவரி இப்பாடசாலையைப் பொறுப்பேற்ற அதிபர் ஏ.தாஜஹான், அப்பாடசாலையின் கல்வி மற்றும் பௌதிக வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். பாடசாலையின் உள்ளக அமைப்புக்களை முறையாக வடிவமைத்து 5S முறைமையை அமுல்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றார்.

ஒவ்வொரு வகுப்புக்கும் வெவ்வேறு நிறத்திலான கதிரை மேசைகள், சிறுவர் நூலகம் அழகுபடுத்தல், சிறுவர் மேடை வடிவமைப்பு, நுழைவாயில் வர்ணம் பூசுதல், வகுப்பறைக்கான நிறப்பூச்சு, சேதமைடைந்த தளபாடங்கள் திருத்துதல், உள்ளக வீதி அமைப்பு என முதல் கட்டமாக பல்வேறு வேலைத்திட்டங்களை அதிபர் தலைமையிலான குழுவினர் நிறைவு செய்துள்ளனர்.

பொத்துவில் பிரதேசத்தின் சிறந்த ஓவியர்களைக் கொண்டு பாடசாலையின் சுவர்கள் ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன.பாடசாலையின் சுற்றுமதில் நிறம் பூசி அழகுபடுத்தப்பட்டுள்ளதுடன், பூமரங்கள் மற்றும் நிழல்தரும் மரங்கள் நடப்பட்டு பாடசாலை வளாகம் அழகுபடுத்தப்பட்டு வருகின்றது.



இதேவேளை மாணவர்களின் பிரத்தியேக வகுப்புக்களை முறையாக நடத்துவதிலும், அவர்களது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் அதிபர் உள்ளிட்ட பாடசாலை முகாமைத்துவக் குழுவினர் கவனம் செலுத்தி வருகின்றனர். திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களை அவ்வப்போது பாராட்டி மகிழ்விப்பதிலும், அதனூடாக ஏனைய மாணவர்களை ஊக்குவிப்பதிலும் அதிபர் கவனம் செலுத்தி வருகின்றார்.





**ஆதம்லெப்பை றியாஸ்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)








நாட்டுக்கோட்டை நகரத்தார் நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய ஆடிவேல் திருவிழா நேற்றுமுன்தினம் நாவலப்பிட்டி நகரில் நடைபெற்றது. (படங்கள் நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# முஸ்வில் தோட்ட லயன் குடியிருப்பில் தீ விபத்து



**(கம்பளை நிருபர்)**

கம்பளை குறுந்துவத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முஸ்வில் தோட்டத்திலுள்ள லயன் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட தீ விபத்தினால் மூன்று வீடுகள் தீக்கிரையாகியுள்ளன. தீ பற்றி எரியும் போது பெரியவர்கள் தொழிலுக்காக சென்றிருந்ததாகவும் சிறுவர்கள் மாத்திரமே வீட்டில் இருந்ததாகவும் தெரியவருகின்றது. இதன்போது வீட்டிலுள்ள அனைத்து பொருட்களும் தீக்கிரையாகி எரிந்து சாம்பலாகியுள்ளதாக தெரியவருகின்றது. மற்ற இரு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. ஒரு வீட்டிலிருந்த புத்தகம், சீருடை, சமையல் உபகரணங்கள் ஆகியன தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளன.

# நுவரெலியா வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சையின் போது பாதிக்கப்பட்டவர்களிடம் விரிவான விசாரணை

## 15 பேர் விசேட வைத்திய குழு முன் வாக்குமூலம்

**(நுவரெலியா தினகரன் நிருபர்)**



நுவரெலியா வைத்தியசாலையில் சத்திரசிகிச்சையின் பின்னர் கண் பார்வை பாதிக்கப்பட்டவர்களிடம் சுகாதார அமைச்சின் வைத்திய குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அண்மையில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 18 பேர் சத்திரசிகிச்சையின் பின்னர் பாதிப்புக்குள்ளான சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக வைத்திய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இக்குழுவினர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்டவர்களிடம் கலந்துரையாடி விசாரணை அறிக்கையொன்றை பெற்றுக் கொண்டதாக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் மகேந்திர செனவிரத்ன தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர்.ஆர்.எம். எஸ்.கே.ரட்ணாயக்க, நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி டாக்டர் மகேந்திர செனவிரத்ன உட்பட்ட குழுவினர் இந்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட 18 பேருக்கு விசாரணைகளில் கலந்துகொள்ளுமாறு அறிவித்திருந்த பொழுதிலும் 16 பேர் மாத்திரமே கலந்து கொண்டனர்.

இதுதொடர்பில் விரிவாக விசாரணைகளை மேற்கொண்டதாகவும் இதன்போது அவர்களுடைய குடும்ப விவரம், வருமானம் உட்பட அனைத்து விடயங்களும் கேட்டறியப்பட்டு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை பாதிக்கப்பட்டவர்களிடம் வாசித்து தெளிவுபடுத்திய பின்னர் அவர்களிடம் கையொப்பமும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் விசேட வைத்தியர்கள் மூலமாக விரிவான கண் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டார்கள்.அந்த வைத்திய அறிக்கையும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர். ஆர்.எம்.எஸ்.கே.ரட்ணாயக்க, நாம் இந்த அறிக்கையை அமைச்சருக்கும் அதே போல பாராளுமன்றத்திற்கும் அமைச்சரவைக்கும் சமர்ப்பிப்போம். அரசாங்கம் எவ்வாறான முடிவுகள் எடுக்கின்றார்களோ அதற்கு ஏற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.

# உயிரை பறித்த குடும்ப தகராறு; இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மனைவியுடன் ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக இளம் கணவரொருவர் நேற்று (2) தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

எம்பிலிப்பிட்டிய நகர ஹோட்டலொன்றிலிருந்தே இவரது சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

சூரியவெவை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் தனது மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இவ்வாறு தற்கொலை செய்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சப்ரகமுவ மகா சமன் தேவாலய வருடாந்த எசல பெரஹெரா

**(காவத்தை தினகரன் விசேட நிருபர்)**

வரலாற்றுச் சிறப்புமிக்க சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் 798ஆவது வருடாந்த எசல பெரஹெரா நேற்றுமுன்தினம் (01) இரவு வெகு சிறப்பாக நடைபெற்றது.

2019 ஆம் ஆண்டு முதல், வரலாற்றுச் சிறப்புமிக்க சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் எசல பெரஹெரா நிகழ்வு அரசின் அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இவ்வருடமும் சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் எசல பெரஹெரா நிகழ்வு அரசாங்கத்தின் பூரண அனுசரணையில் நடைபெற்றது.

பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் நேற்றுமுன்தினம் (01) நடைபெற்ற சப்ரகமுவ மகா சமன் தேவாலயத்தின் இறுதி பெரஹெரா நிகழ்வில் சப்ரகமுவ மாகாண ஆளுநர் சட்டத்தரணி நவீன் திசாநாயக்க, சப்ரகமுவ மாகாண முன்னாள் ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தாய்லாந்து தூதுவர் போஜ் ஹார்ன்போல் (Poj Harnpol), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ.விஜேதுங்க, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குணரத்ன உள்ளிட்ட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.



# மாணவர்களுக்கு தமிழக அரசின் தொழில்நுட்ப சார்பு உதவிகளை பெறுவது தொடர்பில் பேச்சு



மலையக பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் மற்றும் தொழில் பயிற்சி கல்வி பயிலும் மாணவர்களுக்கு தமிழக அரசின் தொழில்நுட்ப சார்பு உதவிகளை பெறுவது தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் பேச்சு நடத்தியுள்ளார்.

தமிழக மாநில அரசின் தொழில்நுட்பவியல் துறை மற்றும் டிஜிட்டல் சேவைகள் அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை மரியாதை நிமித்தம் சந்தித்து கலந்துரையாடிய வேளையிலேயே அவர் இதுதொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள மலையகம் 200 நிகழ்வு குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், மலையகத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு விசேடமாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் தொடர்பான கற்கைநெறிகளுக்கான உதவிகள் பெறுவது சம்பந்தமாகவும் ஆராயப்பட்டுள்ளன.

# கிறேட்வெஸ்டன் வனப்பகுதியிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்பு

**(தலவாக்கலை குறூப்,மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள், ஆ.ரமேஷ்)**

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் கல்கந்தை தோட்டத்தின் ஊடாக செல்லும் இயற்கை வனப்பகுதியில் இளம் பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கல்கந்தை மலை உச்சி என அழைக்கப்படும் வனப்பகுதியின் உச்சியில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக லிந்துலை மற்றும் தலவாக்கலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே இவ்வாறு சடலம் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன் பல்கலைகழக மாணவர்கள் ஆராய்ச்சிக்காக அடிக்கடி கிறேட் வெஸ்டன் கல்கந்தை மலை உச்சிக்கு வருகை தருவது வழமை. இவ்வாறு வருகை தந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த போதே சமத்தரை பகுதியிலிருந்து பெண்ணின் சடலம் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது.

சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தார்.

இதுதொடர்பில் லிந்துலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# நுவரெலியா மாவட்ட மாணவர்களுக்கு கற்றல் உதவி

**(தலவாக்கலை குறூப் நிருபர்)**

நுவரெலியா மாவட்டத்தில் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரண்டினா நிறுவனம் பல்வேறு உதவிகளை செய்துவருகின்றது. அந்தவகையில் பெரண்டினா நிறுவனத்தின் ஊடாக நுவரெலியா மாவட்டத்தில் 7000 பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாச கொப்பிகள் இலவசமாக வழங்கப்பட்டன. இந்நிகழ்வு நுவரெலியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைப்பெற்றது. இந்நிகழவில் அதிதிகளாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, நுவரெலியா வலய கல்விப் பணிப்பாளர் லசந்த அபேரட்ண, உதவி கல்விப் பணிப்பாளர் கணேஸ்ராஜ், பெரண்டினா நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் பி.சிவகாந்த் , அதிபர்கள்,ஆசிரியர்கள் உட்பட மாணவர்களும் கலந்துகொண்டனர்.

# உடவளவ சரணாலய விலங்குகளுக்கு பவுசர்கள் மூலம் குடிநீர் விநியோகம்



**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

உடவளவ சரணாலயத்திலுள்ள மிருகங்கள் மற்றும் பிராணிகளுக்கான குடிநீரை பவுசர்கள் மூலம் விநியோகிக்க வனப்பாதுகாப்பு திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்பிரதேசத்தில் நிலவும் வரட்சி, நீர்ப் பற்றாக்குறை காரணமாக இங்குள்ள மிருகங்கள், பிராணிகள் குடிநீருக்காக கஷ்டப்படுவதனால் வனப்பாதுகாப்பு திணைக்களத்தின்

ஆலோசனைக்கிணங்க இவற்றுக்கான குடிநீரை பவுசர்கள் மூலம் வழங்கி வருவதாக சரணாலய பொறுப்பாளர் உத்பல அதாரங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

# மாத்தளையில் சுதந்திர போராட்ட தியாகி வீரபுரன் அப்புவுக்கு உருவச்சிலை

**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

இலங்கையின் சுதந்திரத்துக்காக 1848 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போராடி உயிர்த்தியாகம் செய்தவர்களில் ஒருவரான வீரபுரன் அப்புவின் உருவச்சிலை பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் எதிர்வரும் 8ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு மாத்தளையில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

மாத்தளை வீரமொனரவில கெப்பட்டிபொல ஜாதிக பதணம அமைப்பின் ஏற்பாட்டில் மாத்தளை மாநகர சபையின் பூரண அனுசரணையுடன் வீரபுரன் அப்புவின் உருவச்சிலை மாத்தளை பூங்கா திடலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் உருவச்சிலையின் திறப்பு விழாவையடுத்து மாத்தளை பிரதேசத்திலிருந்து சுதந்திர போராட்டத்துக்கு பங்காற்றிய வீரபுரன் அப்பு, கொங்காலே கொட பண்டா, கடஹபொல தேரர் போன்ற தலைவர்களின் நினைவு சொற்பொழிவும், சுதந்திர போராட்டம் தொடர்பான நூலும் அக்கூட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ. கமகே, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரோஹண திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோடகொட, மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன, பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் ரோஹித தசநாயக உட்பட மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## அனைவருக்கும்... (03 ஆம் பக்கத் தொடர்)

30 கிலோமீற்றர் தூரம் பயணிக்கும் இவர், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 09ஆம் திகதி பிரதமரிடம் தனது கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை வழங்க திட்டமிட்டுள்ளார்.

## சுகாதார... (03 ஆம் பக்கத் தொடர்)

சார்பில் அச்சங்கத்தின் தலைவர் ரவிகுமுதேஷ் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தொழிற்சங்கங்களை ஒடுக்கும் வகையில் எந்த சந்தர்ப்பத்திலும் செயற்படப் போவதில்லை என, சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். சுகாதார சேவையின் நலன்களைக் கருத்திற் கொண்டு கருத்துக்களை வெளியிடும் போது, மிகக் கவனமாக செயற்பட வேண்டும் என்பதையே, தாம் வலியுறுத்தியிருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஒக்டோபர் வரை... (03 ஆம் பக்கத் தொடர்)

இதனால், மொத்த மின் உற்பத்தியில் நீர் மின் உற்பத்தியின் பங்கு 16 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம், இருபது வீதம் வரை குறைவடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, நாளாந்த மொத்த மின் உற்பத்தியின் 64 வீதம், நிலக்கரி மற்றும் எரிபொருள் மூலமாகவே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. நாளாந்தம் சூரிய சக்தியின் மூலம் 05 வீதமும் காற்றாலைகளின் மூலம் 06 வீதமும் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்படுகின்றன. இந்நிலையில், நாட்டின் மின்சாரத்துக்கான கேள்வி மணிக்கு 48 கிகாவாட் (GW) வரை அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

## ஆணின் சடலம்... (03 ஆம் பக்கத் தொடர்)

போடப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். நுகேகொட குற்றப்புலனாய்வு விசாரணை பிரிவு ஆய்வக அதிகாரிகள் மற்றும் மஜிஸ்திரேட் விசாரணையும் நடைபெறவுள்ளது. கடுவெல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் வீரசிங்கவின் ஆலோசனையின் பேரில் குற்ற விசாரணை பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சந்துரங்க உள்ளிட்ட குழுவினர் விசாரணை மேற்கொள்கின்றனர்.

## மகாவலி... (03 ஆம் பக்கத் தொடர்)

குறிப்பிட்ட அமைச்சர், அதில் கால்வாய்கள், நீர்ப்பாசனக் கட்டமைப்பு மற்றும் நீர்த்தேக்கங்களை புனரமைப்பதற்கு 3,000 மில்லியன் ரூபா ஒதுக்க நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவித்தார்.

கடன் அடிப்படையில் இந்த நிதி பெற்றுக்கொள்ளப்படுவதால் நீண்டகால பயன்பாட்டைக்கொண்ட பணிகளுக்கு இதனை செலவிட அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுவதாகவும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

மகாவலி வலயத்தில் வசிக்கும் ஒரு சிலருக்கு 50 ஆண்டுகளுக்கும் மேலாக காணி உறுதிகள் இருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய புதிய வேலைத்திட்டத்தின் ஊடாக காணி உறுதிகளை வழங்கும் பணியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி "காணி உறுதி வீட்டுக்கே" என்ற தொனிப்பொருளில், மகாவலி காணிகளில் வசிப்பவர்களுக்கான காணி உறுதிகளை அவர்களின் வீட்டுக்கே சென்று வழங்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் அதன் மூலம் இதுவரை 20,000 காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளதோடு மேலும் 15,000 உறுதிகளை வழங்க அவசியமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தற்போது வறட்சியான காலநிலை நிலவுகின்ற பிரதேசங்களில் விவசாயத்திற்குத் தேவையான நீரை நீர்த்தேக்கங்களில் இருந்து விடுவித்தல் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், குறிப்பிட்ட சில நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை விடுவிக்கும்போது அது மின் உற்பத்தியைப் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அவ்வாறு நீரை விடுவிப்பதன் மூலம் மின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தால் நாட்டில் மின் வெட்டை அமுல்படுத்த வேண்டிய நிலை தோன்றும் சாத்தியம் இருப்பதால் விவசாயம் மற்றும் மின் உற்பத்தி என்ற இரண்டு விடயங்களும் பாதிக்காத வகையில் இந்த சிக்கலைத் தீர்க்க முயற்சி எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இது குறித்து அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதுடன், அங்கு மின்சாரத்தை துண்டிக்காத வேலைத்திட்டத்திற்கு நாம் செல்ல வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## பாதாள உலகக் குழுக்களை...

குறிப்பிட்டுள்ளார். கடந்த காலங்களில் தென் மாகாணம் உள்ளிட்ட பல பகுதிகளில் நாளாந்தம் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியிருந்தன.

எனினும், இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதையடுத்து இச்செயற்பாடுகள் குறைவடைந்துள்ளன.

அத்துடன் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை ஊடகங்களினூடாக வெளிப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகவும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

## பட்டதாரிகள் 5,450 பேருக்கு...

ஆங்கிலம் மற்றும் சர்வதேச மொழிகள் போன்ற முக்கிய பாடங்களுக்கென இந் நியமனம் வழங்கப்படவுள்ளது.நியமனம் பெறும் ஆசிரியர்கள் நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் நியமிக்கப்படுவர். மாகாணங்களினூடாக இந்த ஆசிரியர் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.எனினும்,தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரியர்கள், கல்வியமைச்சின் மூலம் இணைத்துக் கொள்ளப்படுவர். இவ்வாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் அதிகாரிக்கு...

தெரிவித்தது. போக்குவரத்து விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் சாரதிக்கு எதிராக அபராதம் விதிப்பதற்கு பொலிஸ் அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கு, எதிர்ப்பு தெரிவித்து பொலிஸ் அதிகாரிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. பஸ் நடத்துநராக கடமையாற்றிய பஸ்ஸின் உரிமையாளரே,இந்த அச்சுறுத்தலை விடுத்திருந்தார். இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றன.

காணொளியின் அடிப்படையில், சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## விஜயகுமாரதுங்கவின்...

சிலைக்குச்சேதத்தைக்குதலால் விஜய குமாரதுங்கவின் சிலையின் முகத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

விஜய குமாரதுங்கவின் சிலைக்கு சேதம் விளைவித்தமை தொடர்பில், எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை என தெஹிவளை பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதுவரையில் முறைப்பாடு எதுவும் கிடைக்காவிட்டாலும் இச்சேதத்தை ஏற்படுத்தியவர் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும், அவரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## போலி ஆவணங்களில்...

கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான சந்தேகத்தின் பேரில், இவர்களது பயணப்பொதிகளை சோதனையிட்டபோது.இதன் போது, பெயர்யான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு கடவுச்சீட்டுகளும் போலி வீசாவும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதனையடுத்து, யுவதியை சோதனைக்குட்படுத்தப் பட்டார். அவரது உள்ளாடைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இத்தாலி வீசாவும் கண்டுபிடிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட தம்பதியினர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## சீமெந்து லொறியுடன் CTB பஸ்...

அம்பேபுஸ்ஸயிலிருந்து அலவ்வ நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும், எதிர்த்திசையில் பயணித்த சீமெந்து லொறியொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் பஸ்ஸில் பயணித்தவர்களில், சுமார் 10 பேர் காயமடைந்து வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் சீமெந்து லொறியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஹரீன், மனுஷ மீதான தடையை...

தடையை ஐக்கிய தேசியக் கட்சி நீக்கியுள்ளது.

நேற்றைய தினம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தின் போதே, இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அவர்கள் இருவரையும் செயற்குழுவில் இணைத்துக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விமல் சொக்கநாதன்...

இலங்கை வானொலியில் தனது ஊடகப் பணியை ஆரம்பித்த விமல் சொக்கநாதன், தனது 75 வயதில் மறைந்துள்ளார். இலங்கை வானொலிக்கு பின்னர் பிபிசி தமிழோசையில் பணிபுரிந்த விமல் சொக்கநாதன், அதன் பின்னர் ஐ.பி.சி வானொலி ரி.ரி.என் தொலைக்காட்சி, ஜி.ரி.வி தொலைக்காட்சி மற்றும் ஐ.பி.சி தொலைக்காட்சி ஆகிய புலம்பெயர் ஊடகங்களில் செய்தி மற்றும் நடப்புவிவகார தளத்தில் தனித்து சேவையை வழங்கியவராவார். விமல் சொக்கநாதனின் மரணம் புலம்பெயர் ஊடகத்துறையை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அவரது மறைவை முன்னிறுத்திய இரங்கல் செய்திகளை அவரது ஊடகத்துறை நண்பர்கள் சமூக வலைத்தளங்களில் வெளிப்படுத்தி வருகின்றனர். அண்மையில், இலங்கையில் தனது நூல் வெளியீட்டையும் விமல் சொக்கநாதன் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

## தங்கத்தின் விலையில்...

காணப்பட்டதாகவும் செட்டியார் தெரு வர்த்தகர்கள் தெரிவித்தனர். அதேவேளை கடந்த வாரம் திங்கட்கிழமை 22 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை 1,56,300 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டதாகவும் நேற்றே இதன் விலை இவ்வாறு குறைந்துள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை 1,69,000ஆக விற்பனை செய்யப்பட்ட 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலை, நேற்றைய தினம் 1,67,000 ரூபாவாக குறைவடைந்ததாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## ரிஷாத் எம்பிக்கு எதிரான...

நடைமுறைப்படுத்துவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று புதன்கிழமை (02) இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. ரிஷாத் பதியுதீன் சமர்ப்பித்த மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைக்கு அனுமதியளித்து. இந்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, இந்த மனுவை பெப்ரவரி 28 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



இலங்கை வானொலியின் புகழ் பூத்த அறிவிப்பாளர் கே.எஸ். ராஜாவின் அர்ப்பணிப்பான சேவையை நினைவு கூரும் முகமாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வளாகத்தில் அவரது உருவப்படம் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவினால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது. (படம்: எம். நசார்)

## இந்திய ரூபாவின் அங்கீகாரமானது...

நாணயங்களாக தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கு அதிகாரமளிக்கின்றது. 1979 டே தொடக்கம் இலங்கை மத்திய வங்கி அவ்வப்போது பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களை அங்கீகரித்துள்ளது. தற்போது பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக வங்கித்தொழில் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ், 2022 ஒகஸ்ட் மாதத்தில் பிந்தியதாக உட்சேர்க்கப்பட்ட இந்திய ரூபாயுடன் பின்வரும் 16 நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய டொலர்,கனேடிய டொலர்,சீன ரென்மின்பி, டெனிஷ் குறோணர்,யூரோ,ஹொங்கொங் டொலர்,இந்திய ரூபா,யப்பானிய யென்,நியுசிலாந்து டொலர் நோர்வே குறோணர்,ஸ்டேர்லிங் பவுண், சிங்கப்பூர் டொலர்,சுவீடன் குறோணர், சுவிஸ் பிராங்க், தாய்லாந்து பாத்,ஐக்கிய அமெரிக்க டொலர். பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களாக வெளிநாட்டு நாணயங்கள் அங்கீகரிப்பதன் முக்கிய நோக்கம், இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக்குவிப்பதாகும்.

மேலும், இரட்டை மாற்றுதலுடன் தொடர்புடைய மேலதிக பரிமாற்றுச் செலவுகளை அது குறைப்பதுடன் முறையான வங்கித்தொழில் வழியூடாக வர்த்தகக் கொடுக்கல், வாங்கல்களை ஊக்குவிப்பதற்கு ஆதரவளிக்கும். உள்நாட்டு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவிற்காக இலங்கையில் சட்டபூர்வமான நாணயமாக இலங்கை ரூபா தொடர்ந்தும் இருக்கும். 2000 மார்சில் இந்திய – இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர், இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான வர்த்தகம் துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளது. இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காகவும் குறிப்பாக இரு நாடுகளுக்குமிடையில் ஏற்கனவே காணப்படுகின்ற வணிக உறவுகளை ஊக்குவிப்பதற்காகவும் இலங்கை மத்திய வங்கி, இலங்கையில் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமாக இந்திய ரூபாவை அங்கீகரிப்பதற்கான இலங்கை மத்திய வங்கியின் விருப்பத்தை இந்திய நாணய ஆணையமாகிய இந்திய றிசேர்வ் வங்கிக்கு பல சந்தர்ப்பங்களில் அறிவித்தது.

இதற்கமைய, இந்திய றிசேர்வ் வங்கியின் ஒப்புதலுடன் 2022 ஒகஸ்டில் இலங்கையில் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றாக இந்திய ரூபா இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாணத்தில்...

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, அமைச்சர் ரமேஷ் பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்தார். தேங்காய் ஏற்றுமதி வருமானம் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளது. எமது நாட்டின் தெங்கு உற்பத்தியில் காணப்படும் பல்வகைத்தன்மை காரணமாக அதற்கான கேள்வி மேலும் அதிகரித்துள்ளது. தேங்காய்ப் பால், தேங்காய் சிரட்டை, கார்பன் உற்பத்திகள் ஆகியவற்றிற்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. இவ்வருடத்தில் தென்னை சார் உற்பத்திகள் ஊடாக 700 மில்லியன் டொலர் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த தசாப்தத்திற்குள், தென்னை சார் உற்பத்திகளிலிருந்து 02 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தைப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கையில் இரண்டாவது தெங்கு முக்கோணத்தை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த இரண்டாவது தெங்கு முக்கோணத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. தெங்கு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு உள்நாட்டு நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதிக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையை மாற்றி ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## அவசர மருந்து தேவைக்கு...

ஆகியோரைக் கொண்ட உயர்மட்டக் குழு, செயற்படும். சுகாதார சேவையை மேம்படுத்துவது மற்றும் சுகாதார சேவைக் கட்டமைப்பை பலப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஆய்வுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் மூன்று மாதங்களுக்குப் போதுமான அவசர மருந்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 30 பில்லியன் ரூபா மேலதிக நிதியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தால் (FDA) அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நாடுகளின் மருந்துகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை அங்கீகரிக்கும் செயல்முறையை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகாரசபைக்கு அறிவுறுத்தினார்.இந் நோக்கில் , தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபைச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு, அத்தியாவசிய மருந்துகள் ஒழுங்காகவும் விரைவாகவும் கிடைப்பதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் இதன் போது அறிவிக்கப்பட்டது.

தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபையில் காணப்படும் பணியாளர் பற்றாக்குறை ஏற்கனவே தீர்க்கப்பட்டுள்ளது. மருந்துத் தயாரிப்புக்களை ஒழுங்குபடுத்துவதற்கும் பொது சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேசிய ஔடதக் கட்டுப்பாட்டு ஆணைக்குழுவின் (NMRA) பங்களிப்பை வலுப்படுத்த விரிவான அறிக்கை ஒன்றை கையளிக்குமாறும் ஜனாதிபதி இதன் போது அறிவித்தார்.

மருந்து விநியோகம் மற்றும் ஆவணப்படுத்தல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம், மருந்து வகைகளை மருத்துவமனைகளுக்கு விநியோகிப்பது தொடர்பில் உடனடி தகவல் வழங்க இணையவழி முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தரமான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான எளிய மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறையை தயாரிப்பதற்காக, திறைசேரி பிரதிச் செயலாளர் ஏ.கே.செனவிரத்ன தலைமையில் ஐவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

தாதியர் ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் தற்போதைய சுகாதார சேவைத் தேவைகளுடன் இணைந்து செல்லும் வகையில், சேவை யாப்பில் திருத்தம் செய்யுமாறு சுகாதார அமைச்சினால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கலைத் துறையில் கற்ற தகுதியான வர்களை தாதியர் பணிக்கு இணைத்து பயிற்சியளிப்பது குறித்து பரிசீலிக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறிவித்தார். மேலும், மருந்துவப் பொருட்களின் தரம், பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை மதிப்பிடுவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரநிலை 04 தரநிலைகளுடன் கூடிய ஆய்வக வசதிகளை ஏற்படுத்துவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு சுகாதார அமைச்சு மற்றும் ஔடதக் கட்டுப்பாட்டு அதிகார சபை என்பவற்றுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இரண்டு வருடங்களுக்குள் காலாவதியாகும் அல்லது அகற்றப்படும் பயன்படுத்த முடியாத வைத்தியசாலை உபகரணங்களின் பட்டியலை உடனடியாக சமர்ப்பிக்குமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, சுகாதார அதிகாரிகளுக்கு வலியுறுத்தினார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெல்ல, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.ஜனக்க ஸ்ரீ சந்திரகுப்த, சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அசேல குணவர்தன உட்பட சுகாதார அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## நெருக்கடியிலிருந்து நாடு மீள்கையில்...

எதிரானது மட்டுமன்றி ஒழுக்கத்துக்கு எதிரானது, நோய்களை விட கடுமையானது.

ஆலோசனை, உடன்பாடு மற்றும் சம தன்மையுடைய ஒழுங்குபடுத்தல் மூலம் பொறுப்புள்ள ஊடகவியலாளர்களை உருவாக்குவது மற்றும் உண்மையான தகவல்களுக்கு முன்னுரிமை வழங்கி குரோதத்தை வெற்றி காண்பது ஆசியவையே ஊடகத்துறை அமைச்சர் என்ற வகையில் எனது பிரதான முயற்சியாகும்.

UNDP 1967ஆம் ஆண்டிலிருந்து நாட்டின் பிரதான அபிவிருத்தி, பொருளாதார திட்டங்கள், சுகாதாரம், கல்வி,நீர்த்துறை மற்றும் தொலைத்தொடர்பு, தகவல் துறை மேம்பாட்டுக்காக உதவிகள், விசேட ஆலோசனைகளையும் தேவையான உபகரணங்களையும் வழங்கி வருகின்றது.

நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னர், முன்னர் எப்போதும் இல்லாத வகையில் பொருளாதார நெருக்கடியை சந்தித்தது.அந்நிலையிலிருந்து படிப்படியாக இயல்புநிலை உருவாகியுள்ளது.

சுரங்கப் பாதையின் முடிவில் காணப்படும் வெளிச்சம் எமக்குத் தென்படாலும் நெருக்கடியான காலகட்டத்தை வெற்றிகொள்ள அனைவரதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

குறிப்பாக ஊடகங்களின் ஒத்துழைப்பு இதற்கு அவசியமாகும். இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே பொறுப்புள்ள பத்திரிகை கலாசாரம் மிகவும் முக்கியமாகின்றது. உருவாக்கப்படும் விமர்சனங்களுக்கு பதில் சொல்லும் சரியான மற்றும் சமநிலை செய்திப் பிரசுரிப்பு அதன் சாத்தியப்பாடுகளுக்கு முக்கியமாக அமையும்.

கடந்த காலங்களில் அறிந்தோ, அறியாமலோ வெளியிடப்பட்ட தவறான தகவல்கள், அடிப்படையற்ற தகவல்கள், மற்றும் குரோதத்தை விதைக்கும் தகவல்கள் என்பவை ஏற்படுத்திய தாக்கங்களால் நாம் பெருமளவு துன்பங்களை அனுபவித்துள்ளோம். அனைவரதும் நன்மைக்காக இவை முடிவுபெற வேண்டுமென்றார்.

## ஜனாதிபதியை நேரடியாக சந்தித்து...

எடுத்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சந்திப்புக்கு, தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரனை வழமையோல் உதவிக்கு அழைத்துச் செல்வாரென்றும் தெரியவருகிறது. மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்கள் ஏற்கனவே 13ஆம் திருத்தம் மூலம் அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசின் 2016 முதல் 2019 வரையான காலத்தில், அச்சமயம் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் அரசுடன் தீர்வுக்கான வழிவகைகள் தொடர்பாகத் தமிழர் தரப்பு ஏற்கனவே விரிவாகப் பேசியிருந்தது.இதில், காணி, பொலிஸ் அதிகாரங்கள் உட்பட்ட அதிகாரப் பரவலாக்கலுக்கு பூர்வாங்க இணக்கம் காணப்பட்டது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவிலும், அரசமைப்புப் பேரவையாக இயங்கிய பாராளுமன்றத்திலும் கூட முழு அளவில் அடிப்படை இணக்கம் காணப்பட்டது. இவ்வாறான சூழலில், எதிர்வரவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமக்குச் சாதகமான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்தும் ஒரே குறுகிய நோக்கத்துக்காக, அரசியலமைப்பிலிருக்கும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்காமல் தவிர்க்கும் பேரினவாத மேலாண்மைத் திட்டம் காணிக்கப்பட்டுள்ளது.ஜனாதிபதியின் இப்போக்கு குறித்துக் மாவை சேனாதிராஜா கடும் சீற்றத்தில் உள்ளதாக நம்பப்படுகிறது.

## இந்திய அரசின் நிதியுதவியில்...

தெரிவித்துள்ளார். இந்திய வம்சாவளி தமிழ் சமூகத்தின் அழகியல் மாற்றத்துக்காக இல்லமால் வாழ்வியலுக்காக இம்மானியத்தை பயன்படுத்த விரும்புவதாகவும் நீண்ட காலத்துக்கான நிலைமைகளை உருவாக்குவது முக்கியமென்றும் அவர் கூறினார்.

"தி ஹிந்து" நாளிதழுக்கு அளித்த பேட்டியிலே, அமைச்சர் தொண்டமான் இதனைத் தெரிவித்தார். குழந்தைகள் காப்பகங்களை தரம் உயர்த்துவது, தொழிலாளர்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்கும் மருந்தகங்களை அபிவிருத்தி செய்வது மற்றும் பல்கலைக்கழகம் அமைப்பது போன்ற திட்டங்களையும் அமைச்சர் விளக்கினார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் கட்டப்பட்ட 50,000 வீடுகளைத் தவிர, மலையக தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களுக்காக 14,000 வீடுகளும் அமைக்கப்படும்.

இதேநேரம் தனிப்பட்ட முறையில், மலையக மக்களுக்கான நில உரிமையை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி விஜயத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி அறிவித்த சுமார் 09 மில்லியன் அமெரிக்க டோலர்களில் இந்த மானியம் அடங்கும்.

அபிவிருத்தி முன்முயற்சிகளின் போக்கை தீர்மானிக்க, எதிர்க்கட்சிகள் மற்றும் சிவில் சமூகத்தின் கருத்துக்களையும் அமைச்சு கலந்தாலோசிக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடெல்லி பயணத்தில், அமைச்சர் ஜீவன் தொண்டமானும் உடன் சென்றார்.

## உலகின் மிக வயதான...

பெட்ரா பொனிடாவிலுள்ள அவரது வீட்டில் காலமானார். வயது முதிர்வு காரணமாக உடல் உறுப்புகள் செயலிழந்ததால் அவர் இறந்ததாக பாலினோவின் குடும்பத்தினர் தெரிவித்தனர். 1895 ஆம் ஆண்டு ஆகஸ்ட் (04) பிறந்த ஜோஸ் பாலினோ, முதல் மற்றும் 02ஆம் உலகப் போர் மற்றும் மூன்று பெருந்தொற்று நோய் காலகட்டத்தில் வாழ்ந்தவர்.

வில்லியன் ஜோஸ் ரோட்ரிக்ஸ் டி செளசா என்ற அதிகாரி, ஜோஸ் பாலினோவின் வயது துல்லியமானது என்றும், அவர் 1900க்கு முன் பிறந்தவர் என்றும் தெரிவித்தார். முன்னர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்த 116 வயதான மரியா பிரன்யாஸ் மோரேரா உலகின் மிக வயதான மனிதர் என்று கின்னஸ் சாதனை படைத்திருந்தார்.

ஜோஸ் பாலினோவின் பிறப்புப் பற்றி கின்னஸ் அமைப்பு துல்லியமாக ஆராயுமானால், மரியா பிரன்யாஸ் மோரேராவின் இடம் பாலினோவுக்கு அளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜோஸ் பாலினோ ஒரு எளிய மற்றும் அடக்கமான மனிதர் என்றும், இயற்கையான வாழ்க்கைமுறையை வாழ்ந்தவர்.

ஜோஸ் பாலினோ தனது 07 பிள்ளைகள், 25 பேரக்குழந்தைகள், 42 கொள்ளுப் பேரக்குழந்தைகள் மற்றும் 11 எள்ளுப் பேரக் குழந்தைகளுடன் இவர் வாழ்ந்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

## நிவாரணங்கள் வழங்கலில்...

மேலும் தெரிவித்த அவர்: ஒவ்வொரு அரசியல் கட்சிகளினதும் அல்லது நபர்களினதும் விருப்பத்திற்கு ஏற்பவே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.இந்நிலையில் இந்த முறைமையை நாம் முற்றாக நீக்கியுள்ளோம்.

25 வருடங்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வந்த முறைமையை மாற்றி, புதிய முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதில் குறைபாடுகள் இல்லாமலில்லை. எனினும், அந்த குறைபாடுகளை நாம் நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அதுமாத்திரமன்றி, நலன்புரி கொடுப்பனவுகள் கிடைக்க வேண்டிய தகுதியானவர்களுக்கு இதனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சமுர்த்தி திட்டத்தை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் ஒரு போது நடவடிக்கை எடுக்காது. சமுர்த்தி திட்டமானது வறுமை நிலையிலிருந்து மக்களை மீட்பதற்கான விரிவான செயற்திட்டமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மலையக தமிழின வரலாற்றின் 200 வருட பூர்த்தி

# புதுக்குடியிருப்பு சந்தி முதல் கிளிநொச்சி வரை நடைபவனி

ஓமந்தை விசேட, தலைமன்னார் விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள்

இலங்கை வாழ் மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், மலையக மக்களின் உரிமை மற்றும் அவர்களின் மூதாதையர் விட்டுச் சென்ற சுவடுகளூடாக பயணிப்பதை நோக்காகக் கொண்டு முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலிருந்து கிளிநொச்சிவரை நடைபவனியொன்று நேற்று புதன்கிழமை (02) முன்னெடுக்கப்பட்டது.



தலைமன்னார் முதல் மாத்தளைவரை மாண்புமிகு மலையகம் - 200 நடைபவனிக்கு வலுச்சேர்த்து ஆதரவளிக்கும் வகையில் 'மன்னார் முதல் மாத்தளைவரை இருப்பை உறுதிப்படுத்துவோம், 'தோழமையை வலுப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து இந்த நடைபவனி ஆரம்பமாகியிருந்தது. விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இந்த நடைபவனியில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊழியர்கள், மதகுருக்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மாண்புமிகு மலையகம் - 200 நடைபவனி கடந்த ஜூலை 29ஆம் திகதி தலைமன்னாரிலிருந்து ஆரம்பமாகியதுடன், இதில் கலந்துகொண்டோரை மன்னார் மாவட்டத்திலுள்ள சகலரும் இனம், மதத்தை கடந்து உபசரித்துள்ளனர். இந்த நடைபவனிக்கு மும்மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள் தமது ஆதரவை வழங்கினர்.

## வடக்கின் உதயம்

# நீராவியடி பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம்

மாங்குளம் குறூப், ஓமந்தை விசேட நிருபர்கள்



முல்லைத்தீவு, பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் நாளையதினம் (04) நடைபெறவுள்ளதாக, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அன்றையதினம் காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேகமும் முற்பகல் 11.30 மணிக்கு விநாயகப்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விசேட பூஜைகளும் நடைபெறவுள்ளது. இதனையடுத்து, பக்தர்களுக்கு விபூதி, களாஞ்சி பிரசாதத்துடன், அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

இதன் பின்னர், அன்றையதினம் மாலை 4.30 மணிக்கு பாரம்பரிய முறைப்படி கோட்டக்கேணி பிள்ளையார் ஆலயத்திலிருந்து மடப்பண்டம் எடுத்து வரப்பட்டு, பூஜைகள் நடைபெறவுள்ளது.

இந்நிலையில், மறுநாள் சனிக்கிழமை (05) அதிகாலை 4.00 மணிக்கு பரிகலம் வழிவிடுதல் நிகழ்வு நடைபெறவுள்ளதாக, ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

பொங்கல் விழாவை சிறப்பிப்பதற்கு பக்தர்கள் தமது ஒத்துழைப்பை வழங்குமாறு, முல்லைத்தீவு ஊடக அமையத்தில் கடந்த திங்களன்று (31) நடத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஆலய நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டனர்.

# சாவகச்சேரி துர்க்காதேவி ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 12ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 13ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 14ஆம் திகதி முற்பகல்10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் 15ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் 16ஆம் திகதி வைரவர் பொங்கலும் நடைபெறவுள்ளதாக, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன், தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 7.00 மணிவரை ஸ்ரீவாணி கலைக்கூட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

## தோணிக்கல் வாள்வெட்டு சம்பவம்

# கைதான 5 சந்தேக நபர்களை 24 மணிநேரம் தடுத்துவைத்து விசாரிக்க நீதவான் அனுமதி

வவுனியா விசேட நிருபர்



வவுனியா, தோணிக்கல் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் வீட்டுக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்த சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் 24 மணிநேரம் வவுனியா தலைமையக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணை செய்ய, வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் சுபாசினி தேவராசா அனுமதி வழங்கியுள்ளார்.

தோணிக்கல்லிலுள்ள மேற்படி வீட்டில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவங்களில் 21 வயதுடைய இளம் குடும்பப் பெண் சம்பவ இடத்தில் உயிரிழந்ததுடன், இதில் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இப்பெண்ணின் கணவர் கடந்த 26ஆம் திகதி உயிரிழந்தார். அத்துடன், இதில் காயமடைந்த ஏனைய 9 பேர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்திய வவுனியா பொலிஸார், 5 சந்தேகநபர்களை கடந்த திங்களன்று (31) கைது செய்து, வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் சுபாசினி தேவராசாவின் இல்லத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) மாலை முன்னிலைப்படுத்தினர்.

சந்தேகநபர்களை தடுத்து வைத்து மேலதிக விசாரணையை முன்னெடுக்க நீதவானிடம் பொலிஸார் அனுமதி கோரிய போதே, இந்த அனுமதியை நீதவான் வழங்கியுள்ளார்.

இவர்கள் வவுனியா, தவசிக்குளம், நெளுக்குளம், சிவபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 27 வயது முதல் 33 வயதுக்கிடைப்பட்ட சந்தேகநபர்களாவர்.

இந்த தாக்குதல் சம்பவத்தை நடத்த பல நாட்களாக திட்டமிடப்பட்டிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், இந்த தாக்குதலுக்காக கொண்டு வரப்பட்ட 3 வாள்கள், ஒரு கோடாரி தோணிக்கல்லிலுள்ள ஏரியில் வீசப்பட்டதாகவும் சந்தேகநபர்கள் பயன்படுத்திய 3 மோட்டார் சைக்கிள்களை கைப்பற்றியுள்ளதாகவும், தெரிவித்தனர்.

## கொக்குத்தொடுவாயில் விபத்து

# உழவு இயந்திரத்தில் சென்ற 24 வயது இளைஞர் பலி

ஓமந்தை விசேட நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பாடசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) இரவு இடம்பெற்ற வாகன விபத்தில் கொழும்பைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன், 27 மற்றும் 42 வயதுடைய ஆண்கள் இருவர் படுகாயமடைந்து மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உழவு இயந்திரமொன்றை திருத்துவதற்காக கொக்குளாய் பிரதேசத்திலிருந்து கொக்குத்தொடுவாய் பிரதேசத்துக்கு கொண்டு சென்றுவிட்டு, மீண்டும் கொக்குளாய் பிரதேசம் நோக்கி அந்த உழவு இயந்திரம் திரும்பிச் சென்றுகொண்டிருந்த போது, வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றுடன் உழவு இயந்திரம் மோதி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தின் போது, உழவு இயந்திரத்தில் பயணித்த மூவரே அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளதாக, கொக்குளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை கொக்குளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்குவிலில் முதியவரின் சடலம் மீட்பு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய ஆலயத்துக்கு அருகிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) இரவு பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஆலய வீதியை அண்டி அமைந்துள்ள சனசமூக நிலையத்துக்கு அருகிலுள்ள அறையில் இந்த வயோதிபர் தனியாக தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், இவரின் வழமையான நடமாட்டம் இல்லாததை தொடர்ந்து அயலவர்கள், இவரது அறைக்கு சென்று பார்த்த போது, இவர் உயிரிழந்து காணப்பட்டார்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அவர்கள் தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று சடலத்தை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாகனத்தில் கடலாமையை கடத்தி சென்ற சாரதி மன்னாரில் கைது!

மன்னார் குறூப் நிருபர்



மன்னாரில் வாகனமொன்றில் உயிருடன் மறைத்துக்கொண்டு செல்லப்பட்ட சுமார் 150 கிலோகிராம் நிறையுடைய அரியவகை கடலாமையை மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) மாலை மீட்டுள்ளதுடன், கடலாமையை கொண்டு சென்ற குற்றச்சாட்டில் அவ்வாகனத்தின் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

கடலாமை கடத்திச் செல்லப்படுவதாக பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து மன்னாரின் சௌத்பார் பிரதான வீதியில், ரெலிக்கொம் சந்தியில் சந்தேகத்துக்கிடமான முறையில் சென்ற இந்த வாகனத்தை வழிமறித்து சோதனை செய்த போது, அதில் இந்தக் கடலாமை மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்ட கடலாமை, நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள வாகனச் சாரதியிடம் பொலிஸார் விரிவான விசாரணையை நடத்தி வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் வீடுடைத்து திருட்டு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள வீடொன்றை உடைத்து தங்க நகைகளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த வீட்டில் கடந்த 30ஆம் திகதி திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதை அடுத்து, விசாரணையை முன்னெடுத்த போதே, இந்த சந்தேக நபரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுமார் இரண்டு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் திருடப்பட்டமை விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## 'சேறு' குறும்படம்

# பாலா திரையரங்கில் வெளியிட ஏற்பாடு

யாழ். விசேட நிருபர்




பதின்ம வயது திருமணம் தொடர்பாக பேசும் 'சேறு' குறும்படம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (06) பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். சாவகச்சேரி பாலா திரையரங்கில் திரையிடப்படவுள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது, குறும்படக் குழுவினர் இதனை தெரிவித்தனர்.

இந்தக் குறும்படம் ஏற்கெனவே மூன்று பாடசாலைகளில் திரையிடப்பட்டுள்ளதாகவும் அனைத்து பாடசாலை மாணவர்களும் இந்தக் குறும்படத்தை பார்க்க வேண்டுமெனவும், அவர்கள் தெரிவித்தனர்.

குறும்படத் தயாரிப்பாளர் லிப்ஸிஜாவின் இயக்கத்தில் உருவாகிய 'சேறு' குறும்படத்தில் ஒளிப்பதிவை சசிகரன் யோவும் இசையை பிரசாந் கிருஸ்ணபிள்ளையும் ஒலியமைப்பை ஜெனிஸ்ரனும் ஒப்பனையை டேறியனும் கலை இயக்குநராக ஜொனாத்தும் படத்தொகுப்பு மற்றும் தயாரிப்பு மேற்பார்வையை விமல்ராஜும் ஆங்கில உபதலைப்பை சர்மிலக்சனும் பின்னணிக் குரலை தமிழரசி, சிவராசா ஆகியோரும் செய்தனர்.

குறும்படத்தில் நடிகர்களாக துர்க்கா மகேந்திரன், டேறியன், டினேஸ், ஜொனாத், கஜனி, சுபாஷினி, புஸ்பராணி, அம்பலம் ஆகியோர் நடித்துள்ளனர்.

## கிளிநொச்சியில்

# மேய்ச்சல் நிலம் கோரி கால்நடை வளர்ப்பாளர்கள் ஆர்ப்பாட்டம்



கிளிநொச்சி குறூப் நிருபர்

கிளிநொச்சியில் மேய்ச்சல் நிலத்தை வழங்குமாறு கோரி கோணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள் நேற்று புதன்கிழமை (02) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நீண்டகாலமாக தமது கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலம் கோரி பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை விடுத்த போதும், இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லையெனத் தெரிவித்த கால்நடை வளர்ப்பாளர்கள், நெல் விதைப்புக் காலத்திலும் வரட்சியான காலத்திலும் தமது கால்நடைகளை வளர்ப்பதில் கடுமையான சிரமங்களை தாம் எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவித்தனர்.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கவனம் செலுத்தி, விரைவில் மேய்ச்சல் நிலத்தை பெற்றுத் தருமாறும், கால்நடை வளர்ப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# யாழ். புலோலியில் இரத்ததான வைபவம்



கரவெட்டி தினகரன நிருபர்

யாழ். வடமராட்சி புலோலி வடமேற்கு முருகன் கோவிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டை முன்னிட்டு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (01) இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது

அறிவகம் சனசமூக நிலையத்தின் தலைவர் தங்கராசா அரவிந்தனின் தலைமையில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றதுடன், கரவெட்டி பிரதேச வைத்தியசாலையின் மருத்துவக் குழுவினர் குருதியை பெற்றுக் கொண்டனர்.

இதில் அறிவகம் சனசமூக நிர்வாகத்தினர், பொதுமக்கள் ஆகியோர் இரத்ததானம் வழங்கினர்.

# கிழக்கின் குரல்



பாராளுமன்ற உறுப்பினர் அதாஉல்லா தலைமையில்

## விவசாய காணிகளில் மணல் நிரப்புவதற்கு எதிராக விசேட கலந்துரையாடல்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



சட்டவிரோதமான முறையில் அரச காணிகள், களப்புக்கள் மற்றும் விவசாய நிலங்களில் மணல் அகழ்தல் மற்றும் மணல் நிரப்புதல் சம்பந்தமான விசேட கலந்துரையாடல், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லா தலைமையில், அம்பாறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் (31) திங்கட்கிழமை இடம்பெற்றது.

பிரதி பொலிஸ் பரிசோதகர் அஜித் ரோஹன மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போது அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பகுதியில் குறிப்பாக அரச காணிகள், களப்புக்கள், விவசாய நிலங்கள் ஆகியவற்றில் மணல் அகழ்தல் மற்றும் நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளினால் இப்பிரதேசம் வெள்ளம் சூழ்ந்த பிரதேசமாக காணப்படுவதாக பல முறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் வலியுறுத்தியுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. இக் கலந்துரையாடலின் போது குறிப்பிட்ட பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள் உட்பட ஏனையோர்களின் உதவியுடன் அனுமதியற்ற முறையில் மணல் நிரப்பும் வயல் காணிகள், அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகள் அடையாளம் காணப்பட்டது.

இந் நிகழ்வில் அம்பாறை பிரதிப் பொலிஸ் மாஅதிபர், பொலிஸ் உயரதிகாரிகள், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர்கள், அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர், அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## காத்தான்குடி பெண்கள் காப்பகத்துக்கு மட்டு. மேல் நீதிமன்ற நீதிபதி விஜயம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்துக்கு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி என்.எம்.அப்துல்லாஹ் (31) திங்கட்கிழமை விஜயம் செய்தார்.

காத்தான்குடி முஸ்லிம் பெ ண்கள் காப்பக நிருவாகத்தி னரின் அழைப்பின் பேரில், அங்கு விஜயம் செய்த மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி, பெண்கள் காப்பகத்தின் நிருவாகத்தினருடன் கலந்துரையாடியதுடன், காப்பகத்தில் இருக்கும் பெண்களிடம் நிலைமைகளை கேட்டறிந்து கொண்டார்.

காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பகத்தின் தலைவி திருமதி சல்மா ஹம்சா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், காப்பகத்தின் நிருவாக சபை உறுப்பினர்களான இமாஸா அஜ்வத், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை அலுவலக இணைப்பாளர் ஏ.அஸீஸ், சென்ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் ஏ.எல்.எம்.மீராசாகிப் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி குற்றவியல் நியாயமும் நிர்வாகமும் எனும் துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றமையை கௌரவித்து, அவருக்கு காத்தான்குடி முஸ்லிம் பெண்கள் காப்பக நிருவாகத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

இதன் போது காப்பகத்தை பார்வையிட்ட நீதிபதி, அங்கிருக்கும் பெண்களுக்கு அறிவுரைகளையும் வழங்கினார்.

## மூதூர் சூரங்கல் பாதை சேதம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் கமநல சேவைகள் நிலையத்திற்கு உட்பட்ட பச்சனூர் ஊடான சூரங்கல் பாதை குண்டும் குழியுமாக சேதமுற்று காணப்படுவதால், இப் பிரதேச எல்லைக்குள் விவசாய செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் மற்றும் போக்குவரத்து செய்யும் வாகன சாரதிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதி ஊடாகவே 15ஆம் வாய்க்கால், எரிக்கிலஞ்காடு, ஒட்டுப்புல்வெட்டை, பெரும்பத்து, பச்சங்குளம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களிலும் விவசாய செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள் போக்குவரத்து செய்கின்றனர்.

இந் நிலையில் விவசாயிகள் வயல் நிலங்களுக்குரிய பொருட்களை உழவு இயந்திரம் மற்றும் மாட்டு வண்டி மூலமாக வயல் நிலங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் இவ்வீதி சேதமடைந்து காணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

## தாந்தாமலை முருகன் ஆலய மஹோற்சவ விழா நிறைவு



(கல்லடி குறூப் நிருபர்)

மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, தீர்த்தோற்சவத்துடன் நேற்று புதன்கிழமை (02) நிறைவடைந்தது.

ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 21 நாட்களாக பல்வேறு கிராம மக்களினால் திருவிழாக்கள் நடைபெற்று நேற்று அதிகாலை தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவுற்றது.

சிவஸ்ரீ மு.க.சச்சிதானந்த குருக்கள் தலைமையில் இடம்பெற்ற இவ் வருடாந்த திருவிழா மகோற்சவத்தில், நாட்டில் பல பாகங்களிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டிக்கெட் விற்பனை நிகழ்வு



திராய்க்கேணி தினகரன் நிருபர்

தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு, தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் வருடாந்தம் நடாத்தப்படும் டிக்கெட் விற்பனை நிகழ்வு, அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ. சி. அகமது சாபிர்க்கு, இளைஞர் சேவை அதிகாரி பி.எம். ரியாத் புதன்கிழமை (02) வழங்கி வைத்தார்.

இதன் போது உதவி பிரதேச செயலாளர் எப். நஹிஜா முஸாபிர், நிர்வாக உத்தியோகத்தர் கே.பி. சலீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த இளைஞர் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு இழப்பு நிகழ்வானது, எதிர்வரும் 12ஆம் திகதி, இலங்கை இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நிர்ணய விலை இல்லாததால் விவசாயிகள் கவலை

கந்தளாய் தினகரன் நிருபர்

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் பகுதியில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு தற்போது அறுவடை நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன .

இம்முறை ஒரு சில பகுதிகளில் நல்ல விளைச்சல்கள் இருந்த போதிலும், நெல்லுக்கு நிர்ணய விலை இல்லாததால் விவசாயிகள் இலாபத்தை ஈட்டிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

விவசாயிகள் வியர்வை சிந்தி கஷ்டப்பட்டு வேளாண்மை அறுவடைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், தனியார் வியாபாரிகள் நெல் வியாபாரிகள் குறைந்த விலைக்கு நெல்லை கொள்வனவு செய்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

அரசு இதனை கருத்தில் கொண்டு நிர்ணய விலையை விவசாயிகளுக்கு பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

## சௌபாக்கிய திட்டத்தின் கீழ் வீடு கையளிக்கும் நிகழ்வு



இறக்காமம் தினகரன் நிருபர்

இறக்காமம் பிரதேச செயலக பிரிவிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின், வீடில்லா பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட வீடு பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (31) இறக்காமம் 2ஆம் பிரிவில் நடைபெற்றது.

இறக்காமம் பிரதேச சமுர்த்தி தலைமை பீட முகாமையாளர் ஏ.எல்.நௌபீர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், இறக்காமம் பிரதேச செயலாளர். எம் .எஸ். எம். றஸ்ஸான் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இறக்காமம் 2ம் பிரிவு இலுக்குச்சேனையில் நீண்ட காலமாக ஓலை குடிசையில் வாழ்ந்த ஐந்து பேர் கொண்ட குடும்பத்தின் வறுமை நிலை கண்டு சமுர்த்தி திணைக்களத்தின் சுமார் ஆறரை இலட்சம் ரூபா நிதியுதவியுடனும், பயனாளிகளின் பூரண பங்களிப்புடனும் சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான வீடு இவ்வாறு கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.எம்.நப்றீஸ், சமூக பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெமீல், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஐ.எல். மக்பூல், ஒ.எல்.யாகூப் உள்ளிட்ட சமுர்த்தி சங்கத்தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## நாவிதன்வெளி பிரதேச செயலாளராக ராகுலநாயகி



(பெரியநீலாவணை விசேட நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலாளராக செல்வி. ராகுலநாயகி புதன்கிழமை (02) தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இலங்கை நிர்வாக சேவை முதலாம் தர அதிகாரியான இவர், இதற்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் வெள்ளாவெளி பிரதேச செயலாளராக சுமார் ஐந்து ஆண்டுகள் கடமையாற்றியிருந்தார்.

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் உதவி பிரதேச செயலாளராகவும் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். நாவிதன்வெளி பிரதேச செயலாளராக கடமையாற்றிய எஸ். ரங்கநாதன் வெள்ளாவெளி பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடமையேற்பு நிகழ்வில் நாவிதன்வெளி உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன், கணக்காளர் கே.றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராசா, நிர்வாக உத்தியோகத்தர் கே. யோகேஸ்வரன், சமூர்த்தி தலைமை பீட முகாமையாளர் எஸ்.சிவம் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## உதவி வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு



பாலமுனை தினகரன் நிருபர்

பாலமுனை மரண உபகரண நிதியத்தின் ஏற்பாட்டில், உதவி வழங்கியவர்களை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (01) நடைபெற்றது.

"உன் பாதம் சொர்க்கத்தின் பக்கம்"எனும் தொனிப் பொருளில், அமைப்பின் தவிசாளர் டாக்டர் எஸ்.எம். றிபாஸ்டீன் தலைமையில் நடைபெற்ற நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வில், வவுனியா மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும், தற்போதைய இறப்பர் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளருமான ஐ.எம்.ஹனிபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு நினைவுச் சின்னங்களை வழங்கி வைத்தார்.

பாலமுனை மரண உபகரண நிதியத்தின் ஜனாஸா இலவச வாகன சேவையின் 12 வருட பூர்த்தியை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில், இவ் அமைப்பின் அமைப்பாளரும், ஆய்வு சபையின் சேவைத் திட்ட பணிப்பாளருமான ஐ.எம்.ஜிப்ரி, சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஹமீட், மு.கா. அமைப்பாளர் ஏ.எல். அலியார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலய அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் வை.எல்.ஏ.பஸீருக்கான சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.சஹ்துல் நஜீம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், அருகில் புதிய அதிபர் சீ.எம்.நஜீப் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்)

## குடிநீர்க் குழாய்கள் தீயில் கருகி நாசம்

வாச்சிக்குடா விசேட நிருபர்

அக்கரைப்பற்று சாகாமம் பிரதான வீதியில், குடிநீர் இணைப்பிற்காக சேமித்து வைக்கப்பட்டிருந்த பெறுமதியான சுமார் 15 பாரிய குடிநீர் குழாய்கள் செவ்வாய்க்கிழமை (01) தீயில் கருகி நாசமடைந்துள்ளன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் குடிநீர் இணைப்பின் பொருட்டு ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கியுள்ளனர்.ஒப்பந்தக்காரரால் சேமித்து வைக்கப்பட்ட நீர்க் குழாய்களே இவ்வாறு தீயில் கருகி நாசமடைந்துள்ளன.

அறுவடை செய்யப்பட்ட வயல் நிலங்களுக்கு தீ வைத்துள்ள நிலையில், வீதியில் அருகில் இருந்த குடிநீர் குழாய்களும் தீயில் அகப்பட்டுள்ளன.

சம்பவத்தினை அறிந்து கொண்ட முன்னாள் ஆலையடிவேம்பு பிரதேச சபை உறுப்பினர் நவனீதன், பிரதேச சபையின் குடிநீர் பவுசரை கொண்டு சென்று தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

தீ பரவிய விடயம் தொடர்பில் ஒப்பந்தக்காரர் பொலிசாரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக அறிய முடிகின்றது.

## அட்டாளைச்சேனை பாத்திமா கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு

அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஐந்தாம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது. இதன்போது திறமைகளை வெளிக்காட்டிய அறுபத்தெட்டு மாணவிகள் தமக்கான பட்டங்களை பெற்றுக் கொள்ளவுள்ளனர் என, கல்லூரியின் ஆளுநர் சபை தலைவரும் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான ஏ.எல்.அனீஸ் தெரிவித்தார்.

பாத்திமா மகளிர் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு செவ்வாய்க்கிழமை (01) கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், 68 மாணவிகள் இப் பட்டமளிப்பு விழாவில் தமக்கான பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

ஹிப்ழு மற்றும் சரிஆ போன்ற மார்கக் கல்வியினை பயின்று வந்த ஐந்து தொகுதி மாணவிகள் இவ்வாறு பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். இதில் 34 மாணவிகள் ஆலிமாக்களாகவும், 34 மாணவிகள் ஹாபிழாக்களாகவும் பட்டங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

# பேருவளை மாளிகாசேனை சேம் ரிபாய் ஹாஜியார் (தேசிய பாடசாலை) மைதானத்தில் இன்று மாபெரும் பரிசளிப்பு விழா

**பேருவளை விசேட நிருபர்**

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையின் 91 ஆவது ஆண்டு பூர்த்தி விழாவை முன்னிட்டு பேருவளையில் தொடர்ச்சியாக நடைபெறும் நிகழ்வுகளில் இறுதி நிகழ்வு வரலாற்று பிரசித்தி பெற்ற பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மைதானத்தில் இன்று மாபெரும் பரிசளிப்பு விழா அப்பாடசாலையின் அதிபர் எஸ்.ஆர். குமார் தலைமையில் நடைபெறும்.

இன்று காலை மேற்படி பாடசாலை கிரிக்கெட் அணிகளுக்கிடையில் பல்வேறு போட்டிகள் நடைபெறுவதோடு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (SDC), ஆசிரியர்கள் மற்றும் மாணவர் தலைவர்களுக்கிடையேயும் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றன.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு பேருவளை சீனன் கோட்டை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை உதைப்பந்தாட்ட அணிக்கும் ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) உதைப்பந்தாட்ட அணிக்குமிடையே சினேக பூர்வ உதைப்பந்தாட்ட போட்டியும் நடைபெறும்.

அத்தோடு மாலை நடைபெறும் மாபெரும் பரிசளிப்பு விழாவில் ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய மாணவர்கள் தேசிய மட்டத்திலும் மற்றும் வலய மட்டத்திலும் பல்வேறு போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற கலை கலாசார நிகழ்ச்சிகளும் மேடையேற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் எஸ்.ஆர்.குமார் தலைமையில் இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் இதற்கான முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

ஏற்கனவே இரு நிகழ்வுகள் நடைபெற்று முடிந்ததோடு 3ஆம் கட்டமாக சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றோருக்கு இதன் போது பரிசில்கள் வழங்கப்படும் என ஏற்பாட்டுக் குழு தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான பாஸி ஸூபைர் தெரிவித்தார்.

ஏற்கனவே சிறுவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள், தினகரன் வாரமஞ்சரி முன்னாள் பிரதம ஆசிரியர் சட்டத்தரணி கலாசூரி ஆர்.சிவகுருநாதன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி மற்றும் தர்காநகர் வை.எம்.எஸ்.ஸீ விளையாட்டுக் கழகம் முன்னாள் வீரர் பொறியியலாளர் மர்ஹூம் ரஸ்மி ஹாஷிம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டி நடைபெற்றதோடு அதற்கான பரிசளிப்பு நிகழ்வு மற்றும் பிரமுகர்கள் கௌரவிப்பு போன்ற நிகழ்ச்சிகள் மிகச்சிறப்பாக நடைபெற்றதை இங்கு குறிப்பிடத்தக்கது.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், இணை ஆசிரியர் எம். மர்லின் மரிக்கார், பிரதம உதவி ஆசிரியர் எஸ். ஸ்ரீகாந்த் உட்பட தினகரன் ஆசிரியர் பீட முக்கியஸ்தர்கள் பலர் நிகழ்வில் கலந்து கொள்வர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் அல்ஹாஜ் பீ.எம் முக்தாரின் ஒருங்கிணைப்பின் கீழ் சமூக சேவையாளர் பாஸி ஸூபைரின் ஏற்பாட்டில் தினகரனின் 91 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் பேருவளையில் 3 கட்டங்களாக நடைபெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை உதைபந்தாட்ட அணி



சீனன்கோட்டை அல் ஹூமைசரா தேசிய பாடசாலை உதைப்பந்தாட்ட அணி



ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை உதைப்பந்தாட்ட அணியோடு பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்.



ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை கிரிக்கெட் அணி



பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையில் முதலாம் தவணைப் பரீட்சையில் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கு பழைய மாணவர் சங்க செயலாளர் அப்துல் லதீப் பெறுமதியான பரிசில்களை தனது சொந்தப் பணத்திலிருந்து வழங்கி வைத்துள்ளார்.மேலும் கணித பாடத்தில் 90 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கும் இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இனிவரும் காலத்தில் பாடசாலைக்கு தொடர்ச்சியாக சமுகமளிக்கும் மாணவர்களுக்கும் பரிசு வழங்க அவர் இணக்கம் தெரிவித்துள்ளார். (படம் : பேருவளை பீ.எம்.முக்தார்)

# சிங்கப்பூரின் ஏழு செய்மதிகள் விண்ணில் ஏவப்பட்டன

## இஸ்ரோ வெற்றிகரமாக அனுப்பி வைத்தது

சிங்கப்பூருக்கு சொந்தமான ஏழு செய்மதிகளை கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரோ வெற்றிகரமாக விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. இந்த ஏழு செய்மதிகளும் அவற்றுக்குரிய புவி வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டன. சிங்கப்பூர் செய்மதிகளை இந்தியாவின் இஸ்ரோ விண்வெளிக்கு அனுப்பி வைத்ததை, இரு நாடுகளின் விண்வெளி கூட்டுறவில் ஒரு மைல்கல் சாதனை என சிங்கப்பூருக்கான இந்தியத் தூதரகம் வர்ணித்துள்ளது. இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ, கடந்த ஞாயிறு காலை 6.30 மணிக்கு சிங்கப்பூர் செய்மதிகளை தாங்கியிருந்த பிஎஸ்எல்வி – சி 56 ஏவுகணையை விண் நோக்கி செலுத்தியது. இப்பயணம் வெற்றிகரமாக நிறைவு பெற்றதாகவும், ஏழு செய்மதிகளும் தமக்குரிய வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாகவும் இஸ்ரோ தலைவர் எஸ்.சோமநாத் தெரிவித்திருந்தார்.

# இந்தியாவின் 105 கலைப் பொருட்களை அமெரிக்கா திருப்பி ஒப்படைப்பு

## அமெரிக்காவுக்கு மோடி நன்றி தெரிவிப்பு

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட 105 பண்டைய காலப் பொருட்களை அமெரிக்க அரசு இந்தியாவுக்கு திருப்பித் தந்துள்ளது. கடந்த ஞாயிறு ஒலிபரப்பான 103ஆவது 'மான்கீ பாத்' நிகழ்ச்சியில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இத்தகவலை பகிர்ந்து கொண்டதோடு அதற்காக அமெரிக்க அரசுக்கு நன்றி தெரிவித்தார். இக் கலைப் பொருட்களை 250 ஆண்டு முதல் 2500 ஆண்டுகள் பழைமை வாய்ந்தவை என்றும் இந்திய கலாசார மற்றும் மதப் பாரம்பரியங்களுடன் தொடர்புபட்டவை என்றும் தெரிய வந்துள்ளது.

இந்தியப் பிரதமர் 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வொஷிங்டனுக்கு பயணங்களை மேற்கொண்டிருந்தபோதும் இவ்வாறு இந்தியாவில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டிருக்கக் கூடிய கலைப் பொருட்கள் திருப்பி அளிக்கப்பட்டதாகவும் அவர்தன் உரையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

கடந்த ஜூன் மாதம் பிரதமர் உத்தியோகபூர்வ விஜயமாக அமெரிக்கா சென்றிருந்த பின்னரான நிகழ்வாகவே நியூயோர்க்கில் வைத்து இக்கலைப் பொருட்கள் அமெரிக்காவுக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சிந்துவிடம் கையளிக்கப்பட்டன. இந் நிகழ்வில் மன்ஹட்டன் மாவட்ட சட்டமா அதிபர் அலுவலகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இப் பொருட்கள் இந்தியாவுக்கு கொண்டு வரப்படுவது இந்திய பாரம்பரியத்தையும் செழுமையான வரலாற்றையும் பேணும் ஒரு முயற்சி என இந்தியப் பிரதமர் தெரிவித்திருந்தார்.

# சாய்ந்தமருதில் போதைக்கு எதிராக மாணவர்கள் பேரணி




**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/அல் ஹிலால் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் போதைப்பாவனைக்கு எதிரான வீதி ஊர்வலமும், போதைக்கு எதிரான பிரசாரமும், துண்டுப்பிரசுர விநியோகமும் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நேற்று (02) சாய்ந்தமருது பிரதான வீதியில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஆலோசனைக்கிணங்க கல்முனை வலயக் கல்வி அலுவலக சிபாரிசின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/அல் ஹிலால் வித்தியாலயத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த பேரணி, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய வாகனத்தில் போதைப்பவனைக்கு எதிரான பிரசாரங்களுடன் பாடசாலை முன்றலில் ஆரம்பித்த இந்த பேரணி சாய்ந்தமருது பொதுச்சந்தை வரை சென்றது.

இந்த பேரணியின் போது போதைப்பொருளினால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலான துண்டுப் பிரசுரங்களை கலந்து கொண்ட அதிகாரிகள் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு வழங்கி வைத்தனர்.

இந்த பேரணியில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹுதுல் நஜீம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன் எனப்பலரும் கலந்து கொண்டதுடனர்.





பேருவளை குருந்துவத்தை செய்லபிம்பாராம விகாரையில் இரத்ததான நிகழ்வொன்று நடைபெற்றது. பிரதேசத்தைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் மக்கள் 106 பேர் இரத்ததானம் வழங்கியதோடு பிரதேச சிங்கள சகோதர்களோடு இணைந்து பேருவளை திடீர் மரண விசாரனை அதிகாரி தேசமான்ய எம்.என்.எம் நஸ்ரினும் கலந்து கொண்டு பங்களிப்புச் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(படங்கள் – பேருவளை விசேட நிருபர்)

# தென்னந் தோப்பு முற்றாக எரிந்து நாசம்



கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் நேற்று திடீரென ஏற்பட்ட தீயினால் 50க்கும் மேற்பட்ட பயன் தரக்கூடிய நிலையில் இருந்த தென்னை மரங்கள் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளன. வீட்டின் உரிமையாளர்கள் வீட்டில் இல்லாத நிலையில் தும்பு தொழிற்சாலையும் நேற்று தொழில் நடவடிக்கை இடம்பெறாத நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. தீயினை கட்டுப்படுத்த அப்பகுதி மக்கள், இடர்முகாமைத்துவக் குழுவினர், கிளிநொச்சி தீயணைப்பு பிரிவினர் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையின் எந்தவொரு மூலைமுடுக்கிலும் தமிழ்மொழியை உதாசீனம் செய்ய முடியாது!

## மனித உரிமை ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் அசீஸ் கூறுகிறார்

இலங்கை அரசியல்யாப்பில் மொழி உரிமை பற்றி நான்காம் அத்தியாயத்தில் விரிவாக கூறப்பட்டிருக்கிறது. அதன்படி இலங்கையின் எந்த மூலைமுடுக்கிலும் தமிழ்மொழியை யாரும் உதாசீனம் செய்ய முடியாது.

இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற சமூக உரிமைப்பாடு இரண்டாம் மொழி கல்வியின் முக்கியத்துவம் மற்றும் மொழிக் கொள்கை பற்றிய இறுதி நிகழ்வில் உரையாற்றிய இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.எம். அசீஸ் தெரிவித்தார்.

மனித அபிவிருத்தித் தாபனம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக கனடா அரசின் அனுமதியுடன் ஐந்து வருட வேலைத்திட்டத்தை மேற்கொண்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செய்திட்டத்தின் ஒரு அங்கமாக சகவாழ்வு சங்கங்கள் ஊடாக ஒன்றிணைந்த கலாசார நிகழ்வையும் கருத்துக்களத்தையும் கடந்த வியாழக்கிழமை மாலை கல்முனையில் ஏற்பாடு செய்திருந்தது.

கல்முனை கிரிஸ்டா இல்லத்தில் தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ.றியால் தலைமையில் இந்த இறுதி அமர்வு இடம்பெற்றது. அங்கு சிறப்பு பேச்சாளர்களாக மனித அபிவிருத்தி தாபனத்தின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா சிங்கள மொழி ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் உரையாற்றினர். முன்னதாக மனித அபிவிருத்தி தாபனத்தின் ஸ்தாபகர்களின் அச்சாணியாக திகழ்ந்து புதனன்று இறையடி சேர்ந்த அமரர் பொன்னையா( கண்டி) அவர்களுக்கு இரண்டு நிமிடம் ஆத்மசாந்தி பிரார்த்தனை இடம்பெற்றது. அங்கு இணைப்பாளர் அசிஸ் பேசுகையில் "வடக்கு, கிழக்கில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழிலேயே முறைப்பாடு செய்ய உரிமை உண்டு. ஏனென்றால் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் மூன்றாவது அத்தியாயத்தின் 14 வது உறுப்பின்படி அது தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோல வடக்கு, கிழக்கில் நிர்வாகமொழி, கல்விமொழி தமிழ்மொழி என்பதையும் நாங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் .

எனவே இலங்கை யாப்பின் நான்காவது உறுப்பில் மொழி உரிமை கூறப்படுகிறது. அந்த உரிமை முழுமையாக பேணப்பட்டால் நாட்டில் சமத்துவம், சமாதானம், நல்லிணக்கம் தானாக உருவாகும். தனிமனித சுதந்திரம் பேணப்படுகின்ற பொழுது மொழி உரிமை தானாகவே பேணப்படும். மொழி உரிமை மீறப்படுகின்ற பட்சத்தில் உரிய இடத்தில் முறைப்பாடு செய்து அதற்கான பரிகாரத்தை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் மொழியை கட்டாயம் நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். அது எமக்கு பல வழிகளிலும் உதவும். ஆனால் தாய்மொழியை என்றுமே நாங்கள் மறந்து விடக்கூடாது. அந்த தாய் மொழியிலேயே கருமமாற்ற இலங்கையில் சட்டம் இருக்கின்றது. உரிமை இருக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது" என்றார்.

நிகழ்ச்சியை அறிவிப்பாளர் நுஸ்ரத் தொகுத்து வழங்கினார். சகவாழ்வு சங்க பிரதிநிதி நந்தினி வரவேற்புரை நிகழ்த்தினார்.





**காரைதீவு குறூப் நிருபர்...**

# அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு சான்றிதழ் கற்கைநெறி அங்குரார்ப்பண விழா

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு நடத்தும் மூன்று மாதகால பயிற்சி சான்றிதழ் கற்கைநெறிக்கான தொடக்க விழா கல்முனை உபபிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. கல்முனை வடக்கு பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் மற்றும் கௌரவ அதிதிகளாக கல்முனை பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ஏ.சி.ஏ.அசீஸ், அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ஐ.எல்.எம் இர்பான்,அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் சட்ட ஆலோசகர் துளாஞ்சினி அருந்தவராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.




குறித்த நிகழ்வானது மங்கள விளக்கேற்றலில் ஆரம்பமாகியது. மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெனித்தா பிரதீபனின் வரவேற்புரையையடுத்து தியாகேஸ்வரி ரூபன் தலைமையுரையாற்றினார். சிறப்புரையை அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு இணைப்பாளர் கலைவாணி தயாபரன் நிகழ்த்தியதுடன் பிரதம அதிதி, மற்றும் கௌரவ அதிதிகளின் உரைகளும் இடம்பெற்றன.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு நடத்தும் மூன்று மாதகால பயிற்சி சான்றிதழ் கற்கை நெறியில் உளவளம், பால்நிலை சமத்துவம், சட்டம், மனித உரிமைகள் தொடர்பானவை, சமூகவலைத்தள குற்றங்கள், போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்பு உள்ளிட்ட பல கற்கைகளுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் பொத்துவில், திருக்கோவில், கல்முனை, காரைதீவு, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு ஆகிய ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் இருந்து நாற்பது யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நிகழ்வினை விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சுயாதீன ஊடகவியலாளருமான குலசிங்கம் கிலசன் தொகுத்து வழங்கினார். அபிவிருத்தி உத்தியோகத்தர் டெலினா றொசைரோவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு நிறுவனமானது 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை பல்வேறு பட்ட சமூகப் பணிகளைச் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**பி.எம்.எம்.ஏ.காதர்...**
*(மருதமுனை தினகரன் நிருபர்)*

# தேசகீர்த்தி மர்ஹூம் மக்கீன் ஆற்றிய சமூகப்பணிகளின் அடையாளமாக விளங்கும் தொட்டவத்தை மகீஸா மஹால்



பிரபல தொழிலதிபரும் மக்களின் நெஞ்சில் நிறைந்த மாமனிதராகவும் விளங்கிய மறைந்த தேசகீர்த்தி மர்ஹூம் மக்கீன் அவர்களின் சமூகப்பணிகளின் நினைவுச் சின்னமாக பல மாடிகளைக்கொண்ட 'மகீஸா மஹால்' விளங்குகின்றது.

அன்னாரின் நாமம் பொதிந்துள்ள மகீஸா மஹால் இப்பிரதேச மக்களுக்கான ஒரு குட்டிப் பல்கலைக்கழகமாகவும் சமயக் கல்விக்கான அரபுக் கலாசாலையாகவும் சமூகத்துக்கான இலவச சனசமூக மற்றும் வரவேற்பு உபசார மண்டபமாகவும் விளங்குகின்றது.இது மறைந்த மக்கீன் அவர்களின் கனவை நனவாக்க அன்னாரின் குடும்பத்தினர் முன்னெடுக்கும் உன்னதமான சேவைகளாகும்.

இந்தக் கலையகம் 2019 ஆம் ஆண்டு அன்னாரின் பாரியார் ஸாகிரா மக்கீன் தலைமையில் மிள்பர் மக்கீன் மற்றும் மிஸ்வர் மக்கீன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. அவரது பிள்ளைகள் தமது தந்தை வழிசென்று அன்னாரின் சிந்தனைகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

மர்ஹூம் மக்கீன் அவர்கள் மறைந்து நாளை (4.8.2023) ஒன்பதாவது நினைவு தினமாகும். அன்னாரின் தூரநோக்குச் சிந்தனையில் உருவான பல மாடிகள் கொண்ட மக்கீஸா மஹால் கலையகமும் திறக்கப்பட்டு நாலாண்டு நிறைவு பெறுகின்றது . இன்று இந்தக் கலையகம் மக்களுக்கும் மாணவர்களுக்கும் சேவைகளை முன்னெடுத்து வருகின்றது.

பாணந்துறை, தொட்டவத்தைக் கிராமத்தில் பிறந்த அவர் கஷ்டப்பட்டு உழைத்து தொழிலதிபர் நிலைக்கு உயர்ந்த முன்மாதிரியான ஒருவராவார். இவர் தான் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசித்தார். அன்னார் ஊடகவியலாளர்களையும் கௌரவப்படுத்த தவறியதில்லை.

இவர் தொட்டவத்தை கிராமத்துக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன. இவற்றில் கல்வித்துறை மற்றும் சமயத்துறைகள் முக்கியமானவையாகும். நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் அன்னாரை அணுகி உதவிக்கரம் கேட்டபோதெல்லாம் பேருதவிகள் செய்துள்ளார்.

மக்களுக்கு இன,மத வேறுபாடுகள் பாராது உதவினார். இவரது இழப்பு பிரதேசத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.அன்னாரின் பிள்ளைகளான தொழிலதிபர் மிள்பர் மக்கீன் மற்றும் மிஸ்வர் மக்கீன் பேரன் சிமர் மிள்பர் மக்கீன் உள்ளிட்ட குடும்பத்தினர் அவரின் சேவைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**எம்.எஸ்.எம். முன்தஸிர்...**
*(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*




# திறப்பனையில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த யானைக்கு மருத்துவர்கள் சிறப்பான சிகிச்சை

## எக்ஸ்ரே, ஸ்கான் பரிசோதனைகளும் முன்னெடுப்பு



துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் திறப்பனை குரட்டியாவ குளத்திற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட காட்டுயானைக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அநுராதபுரம் வலயத்திற்குப் பொறுப்பான உதவிப் பணிப்பாளர் டபிள்யூ.எம்.கே.சந்திரரத்ன தெரிவித்தார்.

அக்போ என்ற அந்த யானைக்கு கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி முதல் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

மானங்கட்டிய, மஹகனதரவ, ஹபரணை, திறப்பனை ஆகிய பகுதிகளில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இந்த அக்போ யானை நடமாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பலா, மாம்பழ காலங்களில் உணவு தேடி கிராமங்களுக்குச் செல்லும் இந்த யானையினால் பிரதேச மக்கள் அச்சமடைந்திருந்தனர். இந்த குறிப்பிட்ட யானை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் அதிகாரிகளால் பின்னர் மீட்கப்பட்டு தற்பொழுது சிகிச்சை அளிக்கப்படுகிறது.

வனவிலங்கு அதிகாரிகள் குறிப்பிட்ட யானையை ஏரியின் நடுவில் இருந்து மீட்க முயன்றனர். ஆனால் முடியவில்லை. பின்னர், இரண்டு படகுகள் உதவியுடன் ஏரியின் நடுப்பகுதிக்கு சென்று யானையை மயக்கமடையச் செய்ய கால்நடை அலுவலர் மற்றும் குழுவினர் முடிவு செய்தனர்.

வனவிலங்கு அதிகாரிகளுக்கு ஆதரவாக, யானையை மிகவும் நேசிக்கும் இந்த நாட்டில் ஹோட்டல் துறையில் ஆறு வருடங்களாக பணிபுரியும் ஜேர்மன் நாட்டினைச் சேர்ந்த வெளிநாட்டு பெண் ஒருவரும் அதிகாரிகளுக்கு உதவியாக வந்திருந்தார் என்பதும் விசேட அம்சமாகும்.

கடந்த ஜூன் 12 ஆம் திகதி காயம் அடைந்த இந்த யானைக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.இதன்படி சுமார் 10 முறை குறிப்பிட்ட யானைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வைத்தியர் சந்தன ஜயசிங்க உள்ளிட்ட குழுவினர் தலைமையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போதைய நிலையில் யானை நன்கு குணமடைந்து வருவதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். கட்டுத் துவக்கில் அகப்பட்டு இடதுகாலில் காயமடைந்த நிலையிலேயே இந்த யானை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

35_40 வயதுடைய இந்த யானை பத்து அடி உயரமும், தும்பிக்கைகள் மூன்றடி நீளமும் கொண்டது எனவும் இந்த யானையானது அப்பகுதியில் உள்ள பெரிய யானையாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த யானைக்கு 'அக்போ' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளதாக வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பிட்ட அக்போ யானைக்கு சிகிச்சை அளிப்பதற்கு வசதியாக பொதுமக்கள் அந்த இடத்தில் ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு வனவிலங்கு அதிகாரிகள் அப்பகுதி மக்களையும் கேட்டுக் கொண்டிருந்தனர்.



யானையின் உடல்நிலை குறித்து அதிகாரிகள் தொடர்ந்து அவதானித்து வருகின்றனர். கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நோய்வாய்ப்பட்டிருந்த அக்போ யானையின் கால்எலும்பு முறிவு மற்றும் வீரியம் குறித்து கண்டறிய சிறப்பு எக்ஸ்ரே பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதாக வனவிலங்கு திணைக்கள சுகாதாரப் பணிப்பாளர் கால்நடை மருத்துவர் தாரக பிரசாத் தெரிவித்துள்ளார்.

அக்போ யானையின் கால் முழுவதுமாக ஸ்கான் செய்யப்பட்டதாகவும்,யானையின் மணிக்கட்டு பகுதியில் எலும்பு முறிவு மற்றும் பெரிய அளவில் தொற்று ஏற்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கால்நடை மருத்துவர் தெரிவித்தார்.

அக்போ யானைக்குரிய வைத்திய சிகிச்சைக்காக திறப்பனை வனவிலங்கு வலயத்திற்குட்பட்ட குரட்டியாவ சரணாலயத்திற்கு வருகை தந்த போது ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அக்போ யானைக்கு அதிகளவான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் செலுத்தப்பட்டுள்ளதாகவும், வனவிலங்கு அதிகாரிகள் யானைக்கு தேவையான சிகிச்சை மற்றும் உணவுகளை வழங்கி வருவதாகவும் அவர் வலியுறுத்தியுள்ளார். யானை குணமாகும் வரை அதற்கான உணவு வழங்க தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க திறப்பனை பொலிஸ் பிரிவில் காட்டுயானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. திறப்பனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊட்டிமடுவ பிரதேசத்தில் ) காடுகளை நோக்கி தேன் எடுக்கச் சென்ற நபர் ஒருவரை காட்டு யானை தாக்கியுள்ள சம்பவமும் அப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.இதன் போது அந்நபர் உயிரிழந்ததாக திறப்பனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஊட்டிமடுவ, வண்ணம்குளம் பகுதியைச் சேர்ந்த ஹசித சந்தருவன் என்ற 26 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர்.

அநுராதபும்ர மாவட்ட ரம்பாவ பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட றொட்டவெவ கிராமத்தில் நூற்றுக்கு மேற்பட்ட காட்டு யானைகள் நடமாடுவதாகவும், அவை பயிர்களை அழித்து வருவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூட்டத்தில் உள்ள ஒரு யானை மிகவும் கொடூரமாக நடந்து கொள்வதாகவும், அண்மையில் ஒரே இரவில் றொட்டவெவ கிராமத்தில் உள்ள 04 வீடுகளை யானைகள் உடைத்து அந்த வீடுகளில் இருந்த நெல் மற்றும் தானியங்களை தின்றதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



**ஏ.ஆர்.எம்.ரபியுதீன்...**
*(திறப்பனை தினகரன் நிருபர்)*

# அநு./அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தின் 10 வருட நிறைவும் தரமுயர்வும்



**கெக்கிராவ குறூப் நிருபர்**

அநுராதபுரம் அல் அஸ்ஹர் வித்தியாலயத்தின் 10 வருட நிறைவும் 9 ஆம் ஆண்டிலிருந்து 10 ஆம் ஆண்டுக்கு தரமுயர்வு பெற்றமையை முன்னிட்டு அதனை கொண்டாடும் வகையில் ஒழுங்கு செய்யப்பட்ட விழாவொன்று நேற்று புதன்கிழமை (2) பாடசாலை மைதானத்தில் வெகுவிமர்சையாக நடைபெற்றது.

பாடசாலை பிரதி அதிபர் ஹில்மி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாடசாலையின் தரமுயர்வுக்கு முன்னின்று உழைத்த ருவன்வெலிசாய விகாரையின் விகாராதிபதி ஈத்தல்வெட்டுனுவெவ ஞானதிலக தேரர் வருகை தந்திருந்ததோடு கௌரவ அதிதிகளாக மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான், வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.



ஜாதிக லொத்தரய் மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.08.01 உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 5193
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,884,336.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 3 8 5 9 6 7

**தன நிதானய**
திகதி 2023/08/01 சீட்டிழுப்பு இலக்கம் 1223
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,672,960.80
ஆங்கில எழுத்து N வெற்றி இலக்கங்கள் 26 39 72 76 விசேட எழுத்து N
லக்ஷபதி Double Chance இலக்கம் 05118

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம் 1541 01/08/2023
Double Chance 26941
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,905,476.00
ஆங்கில எழுத்து K சுப்பர் இலக்கம் 25 வெற்றி இலக்கங்கள் 27 36 67 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**லகி 7 Lucky 7 லக்கி**
திகதி 01.08.2023 சீட்டிழுப்பு இலக்கம் 0019
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 0 7 4 9 7 5
L7 இலக்கம் 2 8
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,342,910.80

**கொவிசெத Govisetha**
சீட்டிழுப்பு இலக்கம் 3435 சீட்டிழுப்பு திகதி 2023.08.01
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 71,142,248.00
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 10 13 47 63 விசேட எழுத்து Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 53178

**ராசி சுப பலன் Handahana**
சீட்டிழுப்பு இலக்கம் 502
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,085,367.80
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 19 45 58 59 விசேட இலக்கினம் மேஷம்

## பொருட் கொள்வனவு அறிவித்தல்
### அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-36

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள் வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகிறன. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்த 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக் கூடியவர்கள் விலை மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

***குறிப்பு எண்*** :- SI/LP/PVC/2023/14

***பொருட்கள்*** :- PVC Matt Sticker Rolls - 140 ± 2.5% - 1.27M x 50M

***எண்ணிக்கை :-*** *120 Rolls*

***விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்*** :-

24/08/2023 பி.ப. 2.00மணி.

***மீளளிக்கப்படாத கட்டணம்*** : ரூபா 2,000.00

24/08/2023 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறும் அவ்வேளையிலேயே மனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் 03/08/2023 இலிருந்து 23/08/2023 வரையிலான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலை மனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு ஏலத்திற்கும் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்தப்படுவதோடு மேலும் அதற்கான எழுத்து மூலமான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவு குழு தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**தொலைபேசி/ பெக்ஸ்** :- **011-2694172/ 011-2694898**
**இணையத்தளம்** :- **www.documents.gov.lk**
2023/07/28

## கொழும் மாநகர சபை
# அறிவித்தல்

இல. 1713/10 மற்றும் 2011 ஜுலை 05ம் திகதிய அதி விசேட வர்த்தமானி பத்திரிகையில் பிரசுரமான கொழும்பு மாநகர சபையின் பிரசார விளம்பரங்கள் அலங்கரிப்புகள் மற்றும் போஸ்டர்கள் பற்றிய துணை விதிச் சட்டத்திற்கமைய பிரகாரம் கொழும்பு மாநகர சபைக்கு குறித்த பிரசார கட்டணங்களை செலுத்தி அதற்காக அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் மாநகர ஆணையாளரின் அனுமதி இன்றி எந்த பிரசார விளம்பரமும் கொழும்பு மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் காட்சிப்படுத்தல் கூடாது. தற்போது நீங்கள் காட்சிப்படுத்தியுள்ள அவ்வாறான பிரசார விளம்பரங்களுக்காக அனுமதியைப் பெறவில்லையெனில் **https://www.colombo.mc.gov.lk** இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து அல்லது அலுவலக நேரங்களில் கொழும்பு மாநகர சபைக்கு வருகைதந்து குறித்த விண்ணப்பத்தை நிரப்பி காசு செலுத்தி முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுமாறு தயவுடன் அறிவித்துக் கொள்கிறேன்.

2023.08.01 முதல் 2023.08.31 வரையான கால எல்லைக்குள் கொழும்பு மாநகர எல்லைக்குள் காட்சிப்படுத்தப்படும். சகல விளம்பர பலகைகளுக்கும் முறையான விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கும். அதன் பிரகாரம் குறித்த பிரசார கட்டணங்களைச் செலுத்தி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு இல்லையெனில் அனுமதி பெறப்படாத பிரசார விளம்பர பலகையாகக் கொள்ளப்பட்டு கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு உரிய அதிகாரத்தின் பிரகாரம் மற்றும் சட்ட ரீதியான விதி முறைகளின் பிரகாரம் முன் அறிவித்தல் இன்றி அவற்றை கழற்றி அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் கொழும்பு மாநகர சபையின் அனுமதி பெற்ற பிரசார விளம்பர பலகைகளில் அனுமதி இலக்கத்தை காட்சிப்படுத்தல் கட்டாயமாகும்.

மேலதிக தகவல்களுக்கு தொடர்புகள்: 011 2692738.

**ஜே. எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை.**
**நகர மண்டபம், கொழும்பு -07.**

## சுற்றாடல் அமைச்சு
# பெறுகை அறிவித்தல்

**ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகள் மன்றத்தின் 5ஆவது அமர்வுக்கான நிகழ்ச்சி முகாமையாளர் ஒருவரை தேர்வு செய்தல்**

**2023 ஒக்டோபர் 3-5இல், கொழும்பு, ஷங்ரிலா**

கொழும்பு, ஷங்ரிலா ஹோட்டலில் 2023 ஒக்டோபர் 3-5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகள் மன்றத்தின் 5ஆவது அமர்வுக்கான நிகழ்ச்சி முகாமைத்துவ சேவையை வழங்குவதற்கு தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுற்றாடல் அமைச்சின் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இந்த சர்வதேச மன்றம் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 39 உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகளின் பங்கேற்புடன் நேரடியான பங்கேற்பு மற்றும் மெய்நிகர் முறையில் நடத்தப்படும். இந்த நிகழ்ச்சிக்கு சுமார் 500 சர்வதேச மற்றும் உள்நாட்டைச் சேர்ந்தவர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான அமர்வு ஷங்ரிலா ஹோட்டலின் போல்ரூமில் நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் அதே நேரம் பக்க நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய இணை நிகழ்ச்சிகள் லோடஸ் போல்ரூமில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்ச்சி பசுமை கருத்தாக்கத்தை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும் என்பதோடு சுற்றுச்சூழல் சார்புடைய வகையில் திட்டமிடப்பட்டு பிளாஸ்டிக் மற்றும் மற்ற உக்கா பொருட்களின் பயன்பாட்டை குறைத்து அதனை வலியுறுத்துவதுடன் சுற்றுச்சூழல் சார்பு அலங்காரங்களை பயன்படுத்த வேண்டும்.

நிகழ்ச்சி முகாமையாளர் சேவைகளை வழங்குவதன் மூலம் நிகழ்ச்சியின் வடிவமைப்பு மற்றும் வசதி அளிக்கும் செயற்பாடுகள் மற்றும் ஏனைய அவசியமான தேவைகளுக்கு பொறுப்பாவார். மேலும் தேர்வு செய்யப்படும் நிகழ்ச்சி முகாமையாளர் ஹோட்டலின் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் பிரதான பங்குதாரர்களின் தேவைகளுடன் இணங்குதல் வேண்டும்.

தேசிய போட்டிரீதியான (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் பணிப்பாளர் (சர்வதேச உறவுகள், சுற்றாடல் அமைச்சு, 'சொபாதம் பியச', இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரியில் இருந்து தள விஜயம் உட்பட மேலதிக விபரங்களை பெறலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011-2034174, 071-8550099, 071-4444909, 077-6237202.

மீளளிக்கப்படாத கட்டணமாக 5000.00 ரூபாவை 2023.08.17 ஆம் திகதிவரை சாதாரண வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை சுற்றாடல் அமைச்சுக்கு ரொக்கப்பணமாக செலுத்தி பத்தரமுல்லை, ரொபட் குணவர்தன மாவத்தை, இல. 416/C/1, 'சொபாதம் பியச', சுற்றாடல் அமைச்சு, செயலாளருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து அமைச்சின் கணக்கு பிரிவில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை பெற முடியும்.

விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். மேலும், மாதிரி விலைமனு ஆவணம் குறிப்பு நோக்கத்திற்காக மாத்திரம் www.env.gov.lk என்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறும். விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு சுற்றாடல் அமைச்சில் 2023.08.09 ஆம் திகதி பி.ப. 2.00க்கு 2ஆவது மாடியில் உள்ள மாநாட்டு அறையில் இடம்பெறும்.

விலைமனுக்களை பத்தரமுல்லை, ரொபட் குணவர்தன மாவத்தை, இல. 416/C/1, 'சொபாதம் பியச', 1ஆவது மாடி, சுற்றாடல் அமைச்சு, கணக்கு பிரிவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் பிரதி ஒன்றை கொண்ட விலைமனுவை முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் 2023.08.18 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சுற்றாடல் அமைச்சு, கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். விலைமனுக்கள் ஏற்பது 2023.08.18 ஆம் திகதி பி.ப. 2.00க்கு நிறைவடையும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகாரிகள் மன்றத்தின் 5அவது அமர்வுக்கான நிகழ்ச்சி முகாமையாளர் ஒருவரை தேர்வு செய்தல்' என்று குறிப்பிடவும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் மூடப்பட்ட பின் சுற்றாடல் அமைச்சின் கூட்ட அறையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

தேவைகளின் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட எந்த ஒரு தேவையையும் மாற்றும் உரிமை பெறுகை நிறுவனத்தினுடையதாகும். திணைக்கள பெறுகைக் குழுவின் முடிவு அனைத்து தீர்மானங்களிலும் இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சுற்றாடல் அமைச்சு,**
**'சொபாதம் பியச',**
**இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை,**
**பத்தரமுல்லை.**

## எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 25A, பிரதான வீதி, எஹலியகொட. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 227, டி சொய்சா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 01/04/11/18 | செப்டம்பர் 2023 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 124/A, துட்டகெமுனு வீதி, கொகுவெல்ல. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 54, D. S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 65/A, ஸ்ரீ சதர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு13. |
| 02/05/12/19 | செப்டம்பர் 2023 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 18, எலகந்த, கந்தல, வத்தல. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 47, கிரான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 17, ஸ்டேஷன் வீதி, கந்தலை சந்தி, வத்தலை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யா-எல. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 230, கண்டி வீதி, மாவனெல்ல. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 06/13/20/25 | செப்டம்பர் 2023 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
உ. 2023-08-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

ஊ. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-08-14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நகர மண்டப வளவு, திண்மக் கழிவுப் பிரிவில் இடம்பெறும்.

**ஏனைய நிபந்தனைகள்:**

(அ) இந்த நோக்கத்திற்காக உள்ள படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

(ஆ) விலைமனுப் பிணை முறியானது ஒன்றில் ரொக்கப் பணமாக அல்லது கொழும்பு மாநகர சபை ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கியொன்றின் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். முன்னைய உரிமைக்கோரல்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களால் வழங்கப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஆ) கேள்விப் படிவக் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டுடன் வியாபாரக் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மட்டுமே விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.

(இ) மாநகர பொறியியல் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(ஈ) விலைமனு பிணை முறியானது நிலையான வடிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் (நிலையான படிவத்தை விலைமனு ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்) மற்றும் கொழும்பு மாநகர சபை, மாநகர ஆணையாளருக்கு முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) விலைமனுப் பிணை முறியானது ஒன்றில் ரொக்கப் பணமாக அல்லது கொழும்பு மாநகர சபை செயலாளருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய வங்கியொன்றின் உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும். முன்னைய உரிமைக்கோரல்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களால் வழங்கப்படும் பிணை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஊ) தேவையான விலைமனுப் பிணை முறி இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

(எ) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் இறுதி நேரத்தின் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

(ஏ) விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

(ஐ) எக்காரணத்தையும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் மற்றும் எந்தவொரு குறைவான விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

**சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு**

**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்**

## கேள்விக்கோரல் தொடர்பான அழைப்பு

**360⁰ தொடர்படல் செயற்றிட்டத்திற்காக மக்கள் தொடர்புகளை செயற்படுத்துவதற்கு மக்கள் தொடர்புகள் (PR) நிறுவனமொன்றை தெரிவு செய்தல்**

### கேள்வி இலக்கம் : SLTPB/PROC/NCB/116

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் வழங்கல் சபைத் தலைவரால், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பிரச்சார வணிக முகாமைத்துவ செயலாளர் காரியாலயத்துடன் இணைந்த தொடர்பாடலில் $360^0$ தொடர்பாடல் செயற்றிட்டத்திற்காக மக்கள் தொடர்புகளை செயற்படுத்துவதற்கு மக்கள் தொடர்புகள் (PR) நிறுவனமொன்றை தெரிவு செய்வதற்கு தகைமைகள் மற்றும் அனுபவங்களுடைய முகவர் நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. உத்தேசிக்கப்பட்ட கூட்டிணைந்த உலகளாவிய விற்பனைத்துறையின் நோக்கமானது 2022 நிதி நெருக்கடி உச்சக்கட்டத்தை அடையும் தருவாயில் மக்கள் பிரச்சாரத்தின் பிரதிபலனாக இலங்கை தொடர்பில் ஏற்பட்ட கடுமையான எண்ணத்தினை மாற்றமடையச் செய்வதாகும்.
2. ஒரு வருடத்திற்குரிய ஆகக்கூடிய முழுமையான ஒப்பந்த பெறுமதி **450 மில்லியன்** ரூபாவதோடு ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ், இந்தியா, சீனா, அவுஸ்திரேலியா, ரஷ்யா, மத்திய கிழக்கு நாடுகள், (ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ஈஸ்ரேல், ஜோர்தான்) மற்றும் ஸ்கென்டினேவியா (நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க்) போன்ற நாடுகளுக்கு தேவையான நிதியனை இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது.
3. கேள்விதாரர்கள் கீழ்வரும் தகைமைகள் மற்றும் முன்னனுபவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:
   அ. நிறுவனமானது இலங்கையினுள் சட்ட நிறுவனமாக பதிவு செய்திருத்தல் வேண்டும்.
   ஆ. மக்கள் தொடர்புகள் அல்லது தொடர்பாடல் மற்றும் பிரச்சார உத்திகளின் அபிவிருத்தி அல்லது ஆக்கப்பூர்வமான அபிவிருத்தி தொடர்பில் ஆகக்குறைந்தது 07 வருட முன்னனுபவம்.
   இ. 2016 முதல் 2022 வரை ஆகக்குறைந்தது மூன்று (03) சர்வதேச நாமங்கள் கையாளப்பட்டமைக்கான அறிக்கை காணப்படல்.
   ஈ. நிறுவனத்திற்கு நிலையான சந்தையினுள் அனைத்து நிறுவனங்கள் / பிரதிநிதிகள் அல்லது உப பிரதிநிதிகள் காணப்படல்.
4. 2006 தேசிய கேள்விக்கோரல் வழிக்காட்டலின்படி தேசிய போட்டி நடைமுறையின் கீழ் இரட்டை கடித உறை முறையினை பின்பற்றி கேள்விக்கோரல் நடாத்தப்படும்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **procurement@srilanka.travel** இற்கு வேண்டுகோளை விடுப்பதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியக முகாமைத்துவ பணிப்பாளரிடமிருந்து அல்லது **nithinip@srilanka.travel** ற்கு பிரதியொன்றினை அனுப்புவதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **2023.08.24** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் நிறுவக கிளையின் கணக்கிலக்கம் **007119985** க்கு மீளளிக்கப்படாத கட்டணமாக **40,000.00 ரூபாவை (நாற்பதாயிரம்)** ஐ செலுத்தி, கீழ்வரும் விபரங்களுடன் **nithinip@srilanka.travel** க்கு கொடுப்பனவை உறுதிப்படுத்தும் ரசீதினை மின்னஞ்சல் மூலமாக அனுப்புவதன் ஊடாக மற்றும் மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினை முன்வைப்பதன் ஊடாக ஆங்கில மொழி மூலமான முழுமையான கேள்விப்பத்திரங்களைக் கொள்வனவு செய்யலாம்.
   - கேள்விதாரரின் பெயர்
   - தொடர்பினை மேற்கொள்ளக்கூடிய நபர் மற்றும் கேள்விதாரர் தொடர்பிலக்கம்
   - தொடர்பினை மேற்கொள்ளக்கூடியவரின் மின்னஞ்சல் முகவரி
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **https://www.srilanka.travel/tender-documents** என்ற இணையத்தளத்தினை பார்வையிடுவதன் ஊடாக கட்டணங்களின்றி கேள்விப்பத்திரங்களைப் பரிசீலனை செய்யலாம்.
8. **2023.08.10**ஆம் திகதி கொழும்பு 03, காலி வீதி, இலக்கம் 80 இல் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் (ஹோட்டல் பாடசாலை) கூட்ட அறையில் இலங்கை நேரம் **மு.ப 10.30** க்கு, இது தொடர்பிலான கேள்விக்கு முந்திய கூட்டம் நடாத்தப்படும்.
9. அனைத்து கேள்விகளும் நிபந்தனைகளுடன் மற்றும் வேண்டுகோளுக்கேற்ப கேள்விப் பிணையுடன் முன்வைக்க வேண்டும். கேள்விப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆவணத்தினை இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியக முகாமைத்துவ பணிப்பாளர், இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03க்கு இலங்கை **ரூபா 4.5 மில்லியன் (ரூ. 4,500,000.00)** தொகையினை **119 நாட்கள்** செல்லுபடியாகுமாறு இலங்கையில் A தர பதிவுடைய வணிக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
10. **2023.08.25 ஆம் திகதி பி.ப 2.00** மணிக்கு முன்னர், தலைவர், அமைச்சின் வழங்கல் சபை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், வழங்கல் பிரிவு (கீழ் மாடி), இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03க்கு கிடைக்குமாறு கேள்விகள் வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்பட வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், வழங்கல் பிரிவு (கீழ் மாடி), இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03 இல் கேள்விதாரர்கள் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.
11. பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
12. இது தொடர்பிலான மேலதிக தகவல்களை காரியாலய வேளைகளில் **(nithinip@srilanka.travel) 0112426800 Ext (117)** என்ற மின்னஞ்சல் ஊடாக அல்லது தொலைபேசி இலக்கங்களின் ஊடாக வழங்கல் சபை தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
13. அமைச்சின் வழங்கல் சபையின் கருத்துப்படி இவ்வழங்கலுக்கான கேள்விக்கோரல் அல்லது கேள்விகள் நிராகரிப்பு மேற்கொள்ளப்படும்.

**தலைவர்,**
**அமைச்சின் வழங்கல் சபை,**
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
**இலக்கம் 80, காலி வீதி,**
**கொழும்பு 03.**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## அறிவித்தல்

2007ஆம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1)ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பெயர்:
**AUJMAN (PVT) LTD.**

பதிவிலக்கம்:
**PV 00250132**

பதிவு முகவரி :
**No. 03,
Anna Nagar Main Street,
Anna Nagar, Vavuniya.**

**செயலாளர்**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றினால் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 21ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.05.22ஆம் திகதியன்று இடம்பெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை பிரத்தியேகமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

1. பிரசித்த நொத்தாரிசு தீப்தி மோனிகா தலுகம அத்தாட்சிப்படுத்திய 2020.10.27 ஆம் திகதியிட்ட 1291ஆம் இலக்க முறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர்.எம்.கே.எஸ். எம். ரத்னாயக்க அத்தாட்சிப்படுத்திய 2015.03.25 ஆம் திகதியிட்ட 3406ஆம் இலக்க முறி ஆகியவற்றின் பேரில் பெற்றுக்கொண்ட மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் வசதி A மீது 2023.05.08ஆந் திகதி வரையான வட்டியும் முதலுமாக 10,632,837,21 ரூபாயும் (பத்து மில்லியன் அறுநூற்று முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு ரூபாய் இருபத்தொரு சதம்) அத்துடன் 2023.05.09 ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரையில் 8,150,000.00/- ரூபாய் (எட்டு மில்லியன் நூற்று ஐம்பதாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு பன்னிரெண்டு (12%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும், மீள் அட்டவணைப்படுத்தப்பட்ட கடன் வசதி B மீது 2023.05.08 ஆம் திகதி வரையான வட்டியும் முதலுமாக 1,700,190.21/- ரூபாயும் (ஒரு மில்லியன் எழுநூறாயிரத்து நூற்றுத் தொண்ணூறு ரூபாய் இருபத்தொரு சதம்) அத்துடன் 2023.05.09 ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை 1,550,429.76 (ஒரு மில்லியன் ஐந்நூற்று ஐம்பதாயிரத்து நானூற்றி இருபத்தொன்பது ரூபாய் எழுபத்தாறு சதம்) மீது ஆண்டுக்கு நான்கு (4%) என்ற வீதத்திலான மேலதிக வட்டியும் இலக்கம் 61 H/1 A, கம்மானய இங்கினிமிட்டிய எனும் முகவரியைச் சேர்ந்த திரு. ரண்கொத் பெடி துரயலாகே அஜித் ஆரியசிங்ஹ, திரு. ரண்கொத் பெடி துரயலாகே சாந்தனி இந்துனில் சமன்லதா மற்றும் திருமதி. சின்ஹல பெடி துரயலாகே குசுமாவதி ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு தீப்தி மோனிகா தலுகம அத்தாட்சிப்படுத்திய 2020.10.27 ஆம் திகதியிட்ட 1291ஆம் இலக்க ஈட்டுமுறி மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர்.எம்.கே.எஸ். எம்.ரத்னாயக்க அத்தாட்சிப்படுத்திய 2015.03.25 ஆம் திகதியிட்ட 3406ஆம் இலக்க ஈட்டுமுறி ஆகியவற்றின் பேரில் நிலுவையாகவுள்ள 10,632,837.21 ரூபாயையும் (பத்து மில்லியன் அறுநூற்று முப்பத்திரண்டாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு ரூபாய் இருபத்தொரு சதம்) அத்துடன் 1,700,190.21/- ரூபாயையும் (ஒரு மில்லியன் எழுநூறாயிரத்து நூற்றுத் தொண்ணூறு ரூபாய் இருபத்தொரு சதம்) அத்துடன் 2023.05.09ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறிப்பிட்ட வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய கீழுள்ள அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3 விஹார மாவத்தை கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.எம்.எச்.ரீ.துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவிற்கமைய இத்தீர்மானத்தினை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி ஆனமடுவ கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணையானது

க்ரோவ்ன் லேண்ட் எனும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் பிரியந்த சமரதுங்க தயாரித்த 2013.10.03 ஆம் திகதியிட்ட 2013/420 ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி 1 என அடையாளமிடப்பட்ட காணியானது, மேல்மாகாணம், புத்தளம் மாவட்டம், கிரிமெட்டியாவ பற்று, நவகத்தேகம பிரதேச சபை எல்லைகளுள், நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 645 கொன்கடவல கிராம அலுவலர் பிரிவில், கடவல எனும் கிராமத்தில் இங்கினிமிட்டிய செயற்றிட்டம் 1A இல் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 1A ஆனது வடக்கில் பிரதேச சபை வீதியையும் பிரதான வடிகாலின் வலது பக்கத்தில் பாதைக்கான ஒதுக்கத்தையும், கிழக்கில், பிரதான வடிகாலின் வலது கரையில் பாதைக்கான ஒதுக்கத்தையும், தெற்கில் 155 மற்றும் 153 ஆம் இலக்க காணித்துண்டுகளையும் மேற்கில் 153 ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டு இவ்வெல்லைகளுக்குள் ஒரு ரூட் மற்றும் பன்னிரெண்டு தசம் ஐந்து எட்டு பேர்ச்சுகள் பரப்பளவையும் (A0.R1.P12.58) மரங்கள், தோட்டங்கள் மற்றும் அங்குள்ள அனைத்தையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு 1A ஆனது கீழ் விவரிக்கப்பட்டுள்ள காணியினது மீளளவையாகும்.

நில அளவைப் பணிப்பாளர் நாயகம் அங்கீகரித்த 3220 ஆம் இலக்க FVP வரைபடத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு 154 ஆனது மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கிரிமெட்டியாவ பற்று, நவகத்தேகம பிரதேச சபை எல்லைகளுள், நவகத்தேகம பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 645 - கொன்கடவல கிராம அலுவலர் பிரிவில் கடவல எனும் கிராமத்தில் இங்கினிமிட்டியா செயற்றிட்டம் 1A இல் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 154 ஆனது வடக்கில் பிரதேச சபை வீதியையும் பிரதான வடிகாலின் வலது கரையில் பாதைக்கான ஒதுக்கத்தையும், கிழக்கில் பிரதான வடிகாலின் வலது கரையில் பாதைக்கான ஒதுக்கத்தையும், தெற்கில் 155 மற்றும் 153 ஆம் இலக்கங்களையுடைய காணித்துண்டுகளையும், மேற்கில் 153ஆம் இலக்க காணித்துண்டையும் எல்லைகளாகக் கொண்டுள்ளதுடன் அக்காணியிலுள்ள அனைத்தையும் உள்ளடக்கி பூச்சியம் தசம் ஒன்று மூன்று மூன்று ஹெக்டேயர்கள் பரப்பளவுடன் LDO 149/114 எனும் இலக்கத்தின் கீழ் புத்தளம் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் L/Nawa/02/58 மற்றும் L/Nawa/02/106 வரை தொடர்ந்துள்ளது.

### ஒதுக்கங்கள்

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

### நிபந்தனைகள்:

1) இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.
2) இக்காணியின் பிரிக்கப்படாத பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யலாகாது.
3) இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
4) இக்காணியின் பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்தவொரு நபரும் உரிமையாளராக முடியாது.
5) இக்காணியோ அல்லது அதன் எந்தவொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிதேசமாகவிருப்பின் அல்லது ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6) அரச முகவரின் எழுத்துப்பூர்வமான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலே ஒழிய உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7) பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொரு பகுதியினதும் இயல்பினை மாற்றக்கூடாது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

**இலங்கை வங்கி
ஆனமடுவ கிளை**

**திரு.டபிள்யு.எம்.பீ.விஜேதுங்க
முகாமையாளர்**

ஏலவிலை கூறுவோர் 032-2263280 என்ற தொலைபேசி எண் ஊடாக ஆனமடுவ கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு மேற்கூறிய சொத்திற்குரிய உரிமைப் பத்திரங்கள் மற்றும் பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

# அறிவித்தல்

## இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்

## ஆயுர்வேத மருந்து விற்பனைக்காக தள (Spot) விற்பனை முகவர் பதவி மற்றும் ஒன்லைன் (Online) விற்பனை முகவர் பதவிக்கு நியமித்தல்

## விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல்

### 01. அறிமுகம்

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் 1957 இல 49 அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1969 மே 11ம் திகதி இலக்கம் 14853/3 எனும் இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படும் ஆயுர்வேத உற்பத்திகளை ஆயுர்வேத வைத்தியசாலை, மருந்தகம், மருத்துவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகிக்கும் செயற்பாட்டை எமது பிரதான களஞ்சியம், விற்பனை நிலையங்கள் 17 மற்றும் மாவட்ட விநியோகிப்பாளர்கள் 21 மூலம் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விநியோக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தி பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் ஆயுர்வேத கூட்டுத்தாபன உற்பத்திகளை மக்களிடம் கொண்டு செல்வதற்காக தள மற்றும் ஒன்லைன் (Spot and Online) விற்பனை முகவர்கள் நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 02. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்

விற்பனைப் பிரதிநிதியாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் 2023 ஓகஸ்ட் 22 அல்லது அத்தினத்திற்கு முன்பு இக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்போது பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 தொகையை கூட்டுத்தாபன காசாளருக்கு செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு அல்லது மக்கள் வங்கியின் கங்கொடவில கிளையின் கணக்கு இலக்கம் 097100362315453 இற்கு ரூபா 1000.00 வைப்புச்செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டுடன் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பத்தை கடித உறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் “தள விற்பனை முகவர்கள்/ஒன்லைன் விற்பனை முகவர்கள்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,
இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்,
இல.94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம
இக் கூட்டுத்தாபனம் பற்றிய மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்காக www.sladc.lk இணையதளத்திற்கு பிரவேசித்து மற்றும் 0112088716 என்ற தொலைபேசி இலக்கத்தில் விசாரித்து பெற்றுக்கொள்ளலாம்.**

**தலைவர்,
கலாநிதி அநுர அதுலத்முதலி
இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம்
2023.08.03**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

2023.03.09 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு எம்.டபிள்யு.ஏ.எஸ்.பி. விஜேவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2012.09.10ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 240, 2014.05.06 ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 732 பிரசித்த நொத்தாரிசு எம்.டி.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2018.10.17ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 1870 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீது 2023.01.03 வரையான வட்டியும் முதலுமாக 23,347,789.09 ரூபாயும் (இருபத்துமூன்று மில்லியன் முந்நூற்று நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்தொன்பது ரூபாய் ஒன்பது சதம்) அத்துடன் 2023.01.04ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு இருபத்தெட்டு தசம் இரண்டு ஐந்து வீதப்படி (28.25%) 19,839,188.36 ரூபாய் (பத்தொன்பது மில்லியன் எண்ணூற்று முப்பத்தொன்பதாயிரத்து நூற்று எண்பத்தெட்டு ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 351/H, புதிய கண்டி வீதி, தெல்கொட என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. பிரியங்காரகே வினீதா மற்றும் திரு. நாரங்கொட லியனகே மெர்வின் ரம்யஜித் ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு எம்.டபிள்யு.ஏ.எஸ்.பி. விஜேவிக்ரம அத்தாட்சிப்படுத்திய 2012.09.10ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 240,2014.05.06ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 732 பிரசித்த நொத்தாரிசு எம்.டி.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2018.10.17ஆம் திகதிய ஈட்டுமுறி இல. 1870 என்பவற்றின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதான மேற்குறித்த 23,347,789.09 ரூபாயையும் (இருபத்துமூன்று மில்லியன் முந்நூற்று நாற்பத்தேழாயிரத்து எழுநூற்று எண்பத்தொன்பது ரூபாய் ஒன்பது சதம்) அத்துடன் 2023.01.04ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பியகம கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிட்ட அட்டவணை

“தெல்கஹவத்த” என அழைக்கப்படும் “கஹட்டகஹவத்த” என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. பிரசாத் விமலசேன தயாரித்த 1996.02.18ஆம் திகதிய 2026ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 74 கண்டுபொட என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடனும் அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியானே கோரளை அதிகாரி பற்று பியகம பிரதேச செயலாளர் பிரிவில் பியகம பிரதேச சபை (இல.01, தெல்கொட உப அலுவலகம்) எல்லைகட்குட்பட்ட இல. 282A, தெல்கொட கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள தெல்கொட கிராமத்தில் அமைந்துள்ளது. வடகிழக்கில் காணித்துண்டு 2ஐயும் தென்கிழக்கில் பாதையையும் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை) தென்மேற்கில் கே.பி. ரத்னாவதியின் காணியையும் (4118A என்ற இலக்க வரைபடத்தில் காணித்துண்டு A எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணி) வடமேற்கில் நீர்க் கால்வாயையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணியானது குறித்த 2026ஆம் இலக்க வரைபடத்தின்படி பதினாறு பேர்ச்சுகள் (ஏ0- ரூ0- பே16) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு கம்பஹா காணிப் பதிவகத்தில் C 884/264 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**

**இலங்கை வங்கி
பியகம கிளை**

**திருமதி எச்.பி.ஆர்.டி. பத்திரண
முகாமையாளர்**

**2015 இல 5 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 54ம் பிரிவை மீறியுள்ளதாகவும், அதன் காரணமாக இல 5 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 131(1) (D) (1) மற்றும் (E) ஆகிய பிரிவின் கீழ் மற்றும் கௌரவ நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**

## இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோரல்

இல.23/28 ஏ, 04ஆம் ஒழுங்கை கும்புக்கஹபொக்குண வீதி, உடஹமுல்ல, நுகேகொடையில் வசிக்கும்,

கடுபெத்தகே தொன் துமிந்த சந்தகெலும் ஆகிய நான், கட்டளையின் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட ஔடதமாக Pregabalin மருந்து 7900 வில்லைகளை என்வசம் வைத்திருந்த குற்றம் சம்பந்தமாக, தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் உணவு மற்றும் மருந்துகள் பரிசோதகர் கே.மஹிந்த சிரிகுமாரவினால் நுகெகொட நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் 16913/23-B (1993/21) இன் கீழ் வழக்கு தொடரப்பட்டிருந்தது மேற்படி குற்றத்திற்கு குற்றத்தை ஒப்புக்கொண்டதால் கௌரவ நீதிமன்றத்தில் 2023 மே 29 எனக்கு ரூபா பதினைந்தாயிரம் (ரூ.15,000.00) தண்டத்தொகை விதிக்கப்பட்டதாக, பொதுமக்களுக்கு அறிவித்துக்கொள்கிறேன்.

**இக்குற்றம் என்னால் மீண்டும் மேற்கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிப்பதுடன் மேற்கொள்ளப்பட்ட குற்றம் சம்பந்தமாக முழு இலங்கை மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன்.**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

**2022.12.27** அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு எம்.டி.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2017.11.07ஆம் திகதிய 1740ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீது 2022.11.16 வரையான வட்டியும் முதலுமாக 25,487,620.49 ரூபாயும் (இருபத்தைந்து மில்லியன் நானூற்று எண்பத்தேழாயிரத்து அறுநூற்று இருபது ரூபாய் நாற்பத்தொன்பது சதம்) அத்துடன் 2022.11.17ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு ஆறு வீதப்படி (6%) 21,760,000.00 ரூபாய் (இருபத்தொரு மில்லியன் எழுநூற்று அறுபதாயிரம் ரூபாய்) மீதான மேலதிக வட்டியும் இல. 51/3, பிட்டியகெதர, பெம்முல்ல என்ற முகவரியைச் சேர்ந்த திரு.ஹீனட்டிகல கமே கங்காணமலாகே சுட்றிகு ரொஷாந்த உதயகுமார் என்பவரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. பிரசித்த நொத்தாரிசு எம்.டி.ஐ.கே. கருணாரத்ன அத்தாட்சிப்படுத்திய 2017.11.07ஆம் திகதிய மேற்குறித்த 1740ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் மீதான மேற்குறித்த 25,487,620.49 ரூபாயையும் (இருபத்தைந்து மில்லியன் நானூற்று எண்பத்தேழாயிரத்து அறுநூற்று இருபது ரூபாய் அறுபத்து நான்கு சதம்) அத்துடன் 2022.10.17ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி மீரிகம கிளையின் முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

### மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

“மீரியகஹமுல்லே வகலஹேன“ என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர். ஆர்.எம்.ஏ. பண்டார தயாரித்த 2017.07.25ஆம் திகதிய 2239ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மத்திய மாகாணம், நுவரெலியா (முன்னர் கண்டி) மாவட்டம், உடபுலத்கம அம்பகமுவ கோரளை அம்பகமுவ நகர சபை மற்றும் பிரதேச செயலகப் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 316 புலத்கம கிராம சேவகர் பிரிவிலுள்ள பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 25, 5, 6 என்பவற்றையும் கிழக்கில் 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 2, 5, 8 என்பவற்றையும் தெற்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 13, உல்பத் ஓயா என்பவற்றையும் மேற்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 6, உல்பத் ஓயா என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2239ஆம் இலக்க வரைப்படத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் மூன்று ஏக்கர்கள் ஒரு ரூட் பதினைந்து தசம் ஏழு பேர்ச்சுகள் (ஏ3-ரூ1-பே15.7) அல்லது 1.35500 ஹெக்ரயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

“மீரியகஹமுல்லே வகலஹேன” என அழைக்கப்படும் காணியின் 2239ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 7 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மத்திய மாகாணம், நுவரெலியா (முன்னர் கண்டி) மாவட்டம், உடபுலத்கம அம்பகமுவ கோரளை அம்பகமுவ நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 316 புலத்கம கிராம சேவகர் பிரிவிலுள்ள பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 5, TP.359308இல் விபரிக்கப்பட்டுள்ள காணியையும் கிழக்கில் TP.359308இல் விபரிக்கப்பட்டுள்ள காணியையும் தெற்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 13, 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 8 என்பவற்றையும் மேற்கில் 2239ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 8ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 2239ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் அதே வரைபடத்தில் காணித்துண்டு இல. 2, 5, 8 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதை ஒதுக்கத்தைப் பயன்படுத்தும் உரிமையுடனும் இருபத்தெட்டு தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0-ரூ0- பே28.6) அல்லது 0.07227 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட காணித்துண்டு இல.1, 7 மற்றும் காணித்துண்டு இல. 2, 5, 8 என அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதை ஒதுக்கம் என்பன கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியிலிருந்து பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான பாகங்களாகும்.

“மீரியகஹமுல்லேவகலஹேன” இப்போது வத்த என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு மத்திய மாகாணம், நுவரெலியா (முன்னர் கண்டி)
மாவட்டம், உடபுலத்கம அம்பகமுவ கோரளை யட்டிஹன்ஹுலஹ பாடுபொல பகுதி அம்பகமுவ நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட இல. 316 புலத்கம கிராம சேவகர் பிரிவிலுள்ள பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளதோடு வடக்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 25ஐயும் கிழக்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல.04, TP.359308 6 என்பவற்றில் தெற்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 13, உல்பத் ஓயா என்பவற்றையும் மேற்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 5, 6 மற்றும் உல்பத் ஓயா என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. குறித்த 2239ஆம் இலக்க வரைபடத்தின்படி அதன்கண் வளரும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதன்கண் காணப்படும் அனைத்துடனும் மூன்று ஏக்கர்கள் மூன்று ரூட்கள் ஏழு பேர்ச்சுகள் (ஏ3-ரூ3-பே07) பரப்பளவைக் கொண்டுள்ள இக்காணி கம்பளைக் காணிப் பதிவகத்தில் B/11/161இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியானது உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர்.எம்.ஏ. பண்டார தயாரித்த 2017.07.25 என்ற திகதியிட்ட 2239 என்ற இலக்கத்தைக் கொண்ட அண்மைய வரைபடத்தில் கீழ்க்காணுமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

“மீரியகஹமுல்லேவகலஹேன” என அழைக்கப்படும் காணியின் 2239ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1-8 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேற்குறிப்பிடப்பட்டவாறு பாடுபொல எனும் இடத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 25, 5, 6 என்பவற்றையும் கிழக்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 4ஐயும் தெற்கில் 6964ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 13ஐயும் மேற்கில் உல்பத் ஓயாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி அதன்கண் காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டடங்கள் என அனைத்துடனும் மூன்று ஏக்கர்கள் மூன்று ரூட்கள் ஏழு பேர்ச்சுகள் (ஏ3-ரூ3-பே07) அல்லது 01.53528 ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**இலங்கை வங்கி
மீரிகம மேற்தரக் கிளை**

**திருமதி கே.பி.கே.ரி.என். அமரசேன
சிரேஷ்ட முகாமையாளர்**

# இந்தியா-பாக். உலகக் கிண்ண போட்டி அட்டவணையில் மாற்றம்

## இலங்கை போட்டியும் திகதி மாறுகிறது



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி ஒக்டோபர் 15 ஆம் திகதியில் இருந்து 14 ஆம் திகதிக்கு மாற்ற பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இணங்கியுள்ளது.

இந்தியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்தின் மாற்றப்பட்ட போட்டி அட்டவணை இன்னும் வெளியிடப்படாதபோதும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போட்டியில் மாற்றம் ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டி நிர்ணயிக்கப்பட்டபடி அஹமதாபத்திலேயே நடைபெறவுள்ளது.

இந்த திகதி மாற்றம் ஹைதராபாத்தில் இடம்பெறவுள்ள இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முக்கியமாக போட்டியிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போட்டி ஒக்டோபர் 12 ஆம் திகதியே நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டு இருந்தது. எனினும் தற்போது அந்தப் போட்டி ஒக்டோபர் 10 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் பாகிஸ்தான் அணிக்கு இரு போட்டிகளுக்கு இடையே போதுமான இடைவெளி வழங்கப்படுகிறது.

வெளியிடப்பட்ட போட்டி அட்டவணையில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெறும் தினம் ஹிந்துக்களின் நவராத்திரி விழாவின் முதல் நாளாக உள்ளது. அன்றைய தினத்தில் பொதுமான பாதுகாப்பு அளிப்பது குறித்து உள்ளூர் பொலிஸார் அக்கறை வெளியிட்டதை அடுத்து போட்டி அட்டவணையில் மாற்றம் கொண்டுவர பரிசீலிக்கப்பட்டது.

இந்நிலையில் போட்டி அட்டவணையில் மேற்கொள்ளப்படும் மாற்றம் குறித்து சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் ஒருசில நாட்களுக்கு முன்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையை அறிவுறுத்திய நிலையில் பாக். சபை அதற்கு இணங்கியுள்ளது.

எனினும் போட்டி அட்டவணையில் மாற்றம் கொண்டுவருவதற்கு நவராத்திரி காரணமில்லை என்றும் அட்டவணையில் மாற்றம் கொண்டுவர பல நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் கோரிக்கை விடுத்ததாகவும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை செயலாளர் ஜெய் ஷா தெரிவித்திருந்தார்.

எனினும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி திகதியில் மாற்றம் கொண்டுவருவது ஏனைய போட்டி திகதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. ஒக்டோபர் 14 ஆம் திகதி ஏற்கனவே இரண்டு போட்டிகளை நடத்த அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

அன்றைய தினத்தில் சென்னையில் பங்களாதேஷ் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதவிருப்பதோடு டெல்லியில் ஆப்கானிஸ்தான் மற்றும் இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இதில் பிந்திய ஆட்டம் பாதிக்கும் நிலையில் அந்தப் போட்டி ஒருநாள் முன்னதாக ஒக்டோபர் 13 ஆம் திகதிக்கு நடத்த வாய்ப்பு உள்ளது.

உலகக் கிண்ணத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருக்கும் நிலையிலேயே போட்டி அட்டவணையில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கனவே போட்டி அட்டவணையை வெளியிடுவதில் நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தது.

உலகக் கிண்ணம் ஆரம்பிப்பதற்கு 100 நாட்கள் இருக்கும்போது கடந்த ஜூன் மாத கடைசியிலேயே போட்டி அட்டவணை வெளியிடப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2015 ஆம் ஆண்டு உலகக் கிண்ணங்களில் ஓர் ஆண்டுக்கு முன்னரே போட்டி அட்டவணை வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அஹமதாபத்தில் நடப்பு சம்பியன் இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் ஒக்டோபர் 05 ஆம் திகதி நடைபெறவுள்ள போட்டியுடனேயே உலகக் கிண்ணம் ஆரம்பமாகவுள்ளது.

எனினும் போட்டிக்கான டிக்கெட் விற்பனை எப்போது ஆரம்பமாகும் என்பது பற்றி ஐ.சி.சி மற்றும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இன்னும் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் நீச்சல் பயிற்சி

*அட்டாளைச்சேனை விசேட நிருபர்*

நீச்சல் பயிற்றுவிப்பாளர்களுக்கான ஒருநாள் நீச்சல் பயிற்சி நெறி எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி மட்டக்களப்பு பெபர் நீச்சல் தடாகத்தில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சி நெறியில் தற்போது நீச்சல் பயிற்றுவிப்பாளராக உள்ளவர்களும், நீச்சல் தெரிந்த நீச்சல் பயிற்றுநராக வருவதற்கு ஆர்வமாக உள்ள இரு பாலாரும் கலந்து கொள்ள முடியும். கலந்து கொள்ள விரும்புவோர் 0776175550 எனும் வட்ஸ்அப் இலக்கம் மூலம் பதிவு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



கொழும்பு சாஹிரா கல்லூரி தேசிய நீச்சல் வீரர் மற்றும் தேசிய சாதனை படைத்த மாணவன் எம்.எப். மொஹம்மட் மற்றும் நீச்சல் பயிற்சியாளர் மொஹம்மட் பவாஸ் ஆகியோருக்கான பாராட்டு விழா கல்லூரி கபூர் மண்டபத்தில் அண்மையில் (24) நடைப்பெற்றபோது பிடிக்கப்பட்ட படம். இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை மற்றும் மாலைதீவுக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் பட்லி ஹிஷாம் ஆதம் கலந்துகொண்டார். *(படம்: ருஸைக் பாரூக்)*

# நிந்தவூர் அல்–மதீனா கபடி அணிகள் வெற்றி

*அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்*



கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான கபடிப் போட்டியின் 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட பிரிவில் நிந்தவூர் அல்–மதீனா மகா வித்தியாலயம் சம்பியன் பட்டத்தை வென்றது. நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) நிறைவடைந்த இந்தப் போட்டியின் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவின் இறுதிப் போட்டியில் அக்போபுர மகா வித்தியாலய அணியையும் 20 வயதுக்கு உட்பட்ட பிரிவின் இறுதிப் போட்டியில் நிந்தவூர் அல்–அஷ்ரக் தேசிய பாடசாலை அணியையும் அந்தக் கல்லூரி அணியினர் தோற்கடித்தனர்.

# கோணாவத்தை ஹைலண்ட் அணி சம்பியனாக தெரிவு

*ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்*



அட்டாளைச்சேனை அல்–நாஜா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட கடற்கரை உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை கோணாவத்தை ஹைலண்ட் விளையாட்டுக் கழகம் சம்பியனானது. அல்–நாஜா கடற்கரை மைதானத்தில் கழத்தின் உப தலைவர் எஸ். இத்ரீஸ் தலைமையில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஹைலண்ட் அணி 2–1 என்ற கோல் அடிப்படையில் தைக்காநகர் எவர்டொப் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது. இதன் பரிசளிப்பு நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



நுகேகொட சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 2023 நீச்சல் போட்டித் தொடர், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையில் நேற்றுமுன்தினம் ராஜகிரிய ஜனாதிபதி வித்தியாலயத்தின் நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது. போட்டி நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நுகேகொட சென். ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களை அணிவித்தார். நிகழ்வில் ரஞ்சன் டயர் ஹவுஸ் உரிமையாளர் பொன்னம்பெரும மற்றும் நுகேகொட சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் ரசாங்ஜலி ஜயதிலக்க, பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். *(படங்கள்: சுலோச்சன கமகே)*

# தொலைதூர விண்கலத்தில் இருந்து மீண்டும் சமிக்ஞை



பூமியில் இருந்து பல பில்லியன் மைல்கள் தொலைவில் இருக்கும் வொயேஜர் 2 விண்கலத்தின் தொடர்பு இழந்த நிலையில் அதன் 'இதயத்துடிப்பு' மீண்டும் கிடைத்திருப்பதாக அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா தெரிவித்துள்ளது.

1977 தொடக்கம் பிரபஞ்சத்தில் தொடர்ந்து ஆய்வு நடத்தி வரும் இந்த விண்கலத்திற்கு தவறான ஆணை வழங்கப்பட்டதை அடுத்து அதன் உணர்கொம்பு பூமியில் இருந்து இரண்டு பாகை அப்பால் விலகி இருந்தது.

இதனால் அந்த விண்கலம் சமிக்ஞைகளை பெறுவதையும் தரவுகளை அனுப்புவதையும் நிறுத்தியது.

இந்நிலையில் விண்ணில் வழக்கமான சோதனையை மேற்கொண்டபோது வொயேஜர் 2 இல் இருந்து சமிக்ஞை கிடைத்ததாக நாசா கடந்த செவ்வாய்க்கிழமை (01) தெரிவித்தது.

வொயேஜர் 2 விண்கலத்தில் இருந்து அனுப்பும் செய்தி பூமியை அடைய 18 மணி நேரம் எடுத்துக் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அந்த விண்கலம் தொடர்ந்து தொடர்பாடலை மேற்கொள்வதாகவும் சிறந்த நிலையில் இருப்பதாகவும் நாசா தெரிவித்துள்ளது.

வொயேஜர் 2 விண்கலம் தற்போது பூமியில் இருந்து 12.3 பில்லியன் மைல்களுக்கு அப்பால் இருப்பதோடு அது தற்போது நட்சத்திரங்களுக்கு நடுவிலுள்ள இடைவெளி பகுதியான மீனிடைப் பெருவெளி மண்டலத்தில் மணிக்கு 34,390 மைல்கள் வேகத்தில் பயணித்து வருகிறது.

சூரிய மண்டலத்தின் வெளிப்பகுதியை ஆய்வு செய்வதற்காகவே இந்த விண்கலம் அனுப்பப்பட்டது. இதனுடன் அனுப்பப்பட்ட வொயேஜர் 1 விண்கலம் தற்போது பூமியில் இருந்து சுமார் 15 பில்லியன் மைல்களுக்கு அப்பால் இருப்பதோடு, இது தொலைதூரம் சென்ற மனிதன் அனுப்பிய பொருளாக பதிவாகியுள்ளது.

இந்த இரு விண்கலங்களிலும் பூமியின் ஒலிகள், படங்கள் மற்றும் வேற்றுக்கிரகவாசிகளுடன் தொடர்பை ஏற்படுத்தும் வகையில் செய்மதிகளும் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# தேர்தல் முடிவுகளை மாற்ற முயற்சி: டிரம்ப் மீது 4 குற்றச்சாட்டுகள் பதிவு



2020ஆம் ஆண்டு நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்க முயன்றதாக, முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் டிரம்ப் மீது குற்றவியல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவை ஏமாற்றும் நோக்கில் சதி செய்தல், அதிகாரப்பூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல், அதிகாரப்பூர்வ நடவடிக்கைகளை தடுக்க சதி செய்தல், அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட உரிமைகளை ஒருவர் நிறைவேற்ற முயற்சி செய்வதை தடுக்க சதி செய்தல் என 4 பிரிவுகளின் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில், ஜோ பைடனுக்கு கிடைக்கவிருந்த ஓட்டுகளை தனதாக்கிக் கொள்ள தேர்தல் அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்க ஒரு வார காலம் இந்த சதிக்கான திட்டம் தீட்டப்பட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

டிரம்ப்புடன் சதி செய்ததாக பெயர் வெளியிடப்படாத 6 பேர்களும் குறிப்பிடப்பட்டிருந்தாலும் தற்போது அவர்கள் மீது குற்றச்சாட்டு பதிவாகவில்லை. ஒருவேளை பின்னர் அவர்கள் பெயர்களும் சேர்க்கப்படலாம் என தெரிகிறது.

இந்த வழக்கு தொடர்பில் வொஷிங்டனில் உள்ள மத்திய நீதிமன்றத்தில் டிரம்ப் இன்று (03) ஆஜராகவுள்ளார்.

இதில் 5 வருட சிறை தண்டனைக்குரிய குற்றமான அமெரிக்காவை ஏமாற்றும் நோக்கில் சதி செய்தல், 20 வருட சிறை தண்டனைக்குரிய குற்றமான உத்தியோகபூர்வ நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்தல், உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை தடுக்க சதி செய்தல் மற்றும் 10 வருட சிறை தண்டனைக்குரிய குற்றமான அரசியலமைப்பினால் வழங்கப்பட்ட உரிமைகளை ஒருவர் நிறைவேற்ற முயலுவதை தடுக்க சதி செய்தல் தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் டிரம்ப் மூன்று வெவ்வேறு வழக்குகளில் மொத்தமாக 78 குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட திட்டமிட்டிருக்கும் 77 வயதான டிரம்ப் இந்த குற்றச்சாட்டுகளை மறுத்ததோடு தாம் எப்போதும் சட்டத்தைப் பின்பற்றியதாகக் கூறினார்.

அண்மையில் சமூக வலைதள பதிவில், "2016 தேர்தலில் நான் வென்றதை எதிர்த்து ஜனநாயக கட்சியினர் போராட்டம் நடத்தியதைபோல், ஒரு தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை என தெரிந்தால் அதனை எதிர்த்து போரிட எனக்கு முழு உரிமை உள்ளது" என டிரம்ப் கூறியுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 3ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.